விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு
website : www.valampurii.lk
viber : 076 636 3378

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk


கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1500/= + 500/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 கார்த்திகை 02 வியாழக்கிழமை (18.11.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 334

## “நந்தி ஒழிக”

### பாராளுமன்றில் எதிர்க்கட்சியின் ஆர்ப்பாட்டத்தால் கடும் சர்ச்சை




*(கொழும்பு)*

பாராளுமன்றத்தில் “நந்தி ஒழிக” என்று எழுதப்பட்ட பதாதைகளுடன் ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தியதால் கடும் சர்ச்சை ஏற்பட்டுள்ளது.

(15ஆம் பக்கம் பார்க்க)

## இந்து மக்களின் மனம் பெரிதும் புண்பட்டுவிட்டது

### சர்வதேச இந்துமத பீடம் கடும் கண்டனம்



(கொழும்பு)

பாராளுமன்றத்தினுள் நேற்று எதிர்க்கட்சியால் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத் தின்போது “நந்தி ஒழிக” என்று எழுதப்பட்ட பதாதை கள் ஏந்தியிருந்தமைக்கு சர்வதேச இந்து மத பீடம் கண்டனம் வெளியிட்டுள் ளது.

இது தொடர் 15

## வடக்கில் மழைக்கு வாய்ப்பு

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் கனத்த மழை பெய்ய வாய்ப்புள்ள தாக வானிலை ஆய்வு மையம் அறிக்கை வெளியிட் டுள்ளது.

சுமார் 100 மில்லி 15

# மாவீரர் நினைவேந்தலுக்கு நீதிமன்றங்கள் தடை

### பலருக்கு எதிராக தடையுத்தரவு



(கோப்புப் படம்)

*(யாழ்ப்பாணம்)*

**மாவீரர் நாள் நினைவேந்தலை அனுஷ்டிக்க நீதிமன்றங்களால் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.**

**பொலிஸாரால் நீதிமன்றங்களின் ஊடாக மாவீரர் நாள் நிகழ்வுகளை மேற்கொள்ள பலருக்கு எதிராக தடையுத்தரவு பெறப்பட்டுள்ளது.**

முல்லைத்தீவு பொலிஸ் பிரி வில் மாவீரர் வாரத்தினைக் கடைப்பிடிப்பதற்கு 12 பேருக்கு முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றம் நேற்று தடை உத்தரவு பிறப்பித் துள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர்கள் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன், முன் னாள் மாகாண சபை உறுப்பினர் கள் எம்.கே.சிவாஜிலிங்கம், து.ரவிகரன், பீற்றர் இளஞ்செழி யன், த.யோகேஸ்வரன் உட்பட் டவர்களுக்கே குறித்த தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

முள்ளியவளை பொலிசாரினால் நேற்று மாங்குளம் நீதிமன்றில் AR 869/21 வழக்கினூடாக முள்ளியவளை பொலிஸ் பிரதேசத்தில் மாவீரர் நாள் நினைவேந் தல் நிகழ்வுகளை நடத்துவதை தடை செய்யக்கோரி வழக்கு 15

## மனோ எம்.பிக்கு கொரோனா

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசனுக்கு கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முன்னெடுக்கப்பட்ட கொரோனா பரிசோதனையில் அவருக்கு தொற்று உறுதி செய் யப்பட்டுள்ளது. (ம)

### கிளிநொச்சி சிவபுரம் பகுதியில்

## இளம் குடும்பஸ்தர் வெட்டிப் படுகொலை



(கிளிநொச்சி)

கிளிநொச்சி பரந்தன் சிவபுரம் பகுதியில் நேற்று அதிகாலை 27 15

## தொற்றாளர்கள் அதிகரித்தால் மீண்டும் பயணக் கட்டுப்பாடு

### சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டில் கொரோனாத் தொற் றாளர்களின் எண்ணிக்கை அதி கரித்தால் மீண்டும் பயணக் கட்டுப்பாடு விதிக்கப்படும் என சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் ஹேமந்த ஹேரத் எச் சரித்துள்ளார். 15

### அந்நிய செலாவணி நெருக்கடி தீரும்வரை

## நாட்டில் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படும்

### அமைச்சர் உதய கம்மன்பில

(கொழும்பு)

அந்நிய செலாவணி நெருக் கடிக்கு தீர்வு காணும் வரை சொல்வதற்கு 15

### நாட்டில் மேலும்

## 23 பேர் பலி

(கொழும்பு)

கொரோனா தொற்றால் நாட் டில் மேலும் 23 பேர் 15

### கிளிநொச்சியில்

## 10 மாணவர்கள் உட்பட 46 பேருக்கு கோவிட்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் கொரோனாத் தொற்று மீண்டும் அதிகரித்து செல்வதாக தெரி விக்கப்பட்டுள்ளது.

நேற்று மட்டும் பாட 15

## கண்ணீர் அஞ்சலி



யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரியின்
பிரதி அதிபர்

**அமரர் முத்துராசா ரவீந்திரன்**

அவர்களின் இழப்பால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு
அவரின் ஆத்ம சாந்திக்காக
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**ஆசிரிய சகோதரத்துவம்**
**சாவகச்சேரி இந்துக் கல்லூரி**

(C-3042)

## கண்ணீர் அஞ்சலி



(C-3041)

யா/சாவகச்சேரி
இந்துக் கல்லூரி பிரதி அதிபர்

**அமரர்**
**முத்துராசா ரவீந்திரன்**

அவர்களின் இழப்பால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு
அவரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**அதிபர் சங்கம், தென்மராட்சி**

## கண்ணீர் அஞ்சலி



வடக்கு மாகாண சமூக சேவைகள்
உத்தியோகத்தர் நலன்புரிச் சங்க பொருளாளரும்
வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்கள
தலைமைப்பீட சமூக சேவைகள் உத்தி
யோகத்தருமாகிய திரு. **வி. சண்முகநாதன்**
அவர்களின் அன்புத் தந்தையார்

**அமரர் முத்துக்குமாரு**
**விநாயகமூர்த்தி**

அவர்களின் மறைவையொட்டி
துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தி
னருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக்கொள்வதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**தோற்றம் - 03.01.1939**
**மறைவு - 17.11.2021**

(8668)

**வடக்கு மாகாண சமூக சேவைகள் உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கம்**

## கண்ணீர் அஞ்சலி

யா/மீசாலை வீரசிங்கம் மத்திய
கல்லூரி உப அதிபர்

**அமரர் ஐயாத்துரை**
**குணசீலன்**



17/11/2021இல் இறைவனடி சேர்ந்தார்.
அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு
அவரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**அதிபர் சங்கம்**
**தென்மராட்சி**

(C-3040)

## மரண அறிவித்தல்

பிறப்பு
1940 - 09 - 07



இறப்பு
2021 - 11 - 17

### திருமதி பாக்கியம் சண்முகம்

நவக்கிரியை பிறப்பிடமாகவும் கோப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட பாக்கியம் சண்முகம் அவர்கள் நேற்று (17.11.2021) புதன் கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா - பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மகளும் சின்னத்தம்பி - வள்ளிப்பிள்ளை தம்பதி யினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சண்முகம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை, சாந்தா மற்றும் வள்ளிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும் சற்குணமணி, சறோஜினிதேவி, சத்தியசீலன், புஸ்பராஜா (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவராசா, கமலாதேவி (கனடா), உதயகுமாரி ஆகியோரின் அன்பு மாமியாரும் லக்சுதன், இமான்சன், கீர்த்தனா, கீர்த்திகரன், பிரணஜா, உஷாணி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (18.11.2021) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பிற்பகல் 2.30 மணியளவில் கோப்பாய் இளங்காட்டு மயானத்தில் தகனக் கிரியைகள் இடம்பெறும் என்பதனை உற்றார், உறவினர்கள், நண்பர்களுக்கு அறியத் தருகின்றோம்.

**இராச வீதி, கோப்பாய் மத்தி,**
**கோப்பாய்.**

(8664)

*தகவல்:-* **குடும்பத்தினர்**
**(சறோஜினிதேவி)**

## மரண அறிவித்தல்

மலர்வு
1946 - 07 - 28



உதிர்வு
2021 - 11 - 14

### திருமதி தங்கம்மா குமாரசாமி

இடைக்குறிச்சி வரணியைப் பிறப்பிடமாகவும் நுணாவில் மத்தி சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கம்மா குமாரசாமி (மாசிலாமணி) கடந்த 14.11.2021 ஞாயிற் றுக்கிழமை அன்று சிவபதமடைந்தார்.

அன்னாரின் தகனக் கிரியைகள் அன்றைய தினமே கோம் பயன்மணல் இந்து மயானத்தில் இடம்பெற்றது. இவ்அறிவித் தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்ட அன்புள் ளங்களுக்கும் Telephone, viber, whatsapp, facebook ஊடாகவும் நேரடியாகவும் இரங்கலைத் தெரிவித்த அனைத்து உள்ளங் களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**நுணாவில் மத்தி,**
**சாவகச்சேரி.**

(8663)

*தகவல்:-* **குடும்பத்தினர்**
**077 080 1804**

## யாழ்.பல்கலைக்கழக

# முகாமைத்துவபீட மாணவர்களுக்கு வருடாந்தம் தங்கப் பதக்கங்கள்


(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வணிக, முகாமைத்துவ பீடத்திலுள்ள கணக்கியல், நிதிமுகாமைத்துவம் மற்றும் வணிகம் (கணக்கியலும், நிதியும்) ஆகிய துறைகளில் பயின்று சிறப்புத் தேர்ச்சி பெறும் மாணவர்களுக்கு ஒவ்வொரு வருடமும் இடம்பெறும் பட்டமளிப்பு விழாவின் போது இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் தங்கப் பதக்கங்கள் வழங்கப்படவுள்ளன.

இதற்காக வணிக முகாமைத்துவ பீடத்துக்கும், இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்துக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடும் நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில், யாழ். பல்கலைக்கழக வணிக, முகாமைத்துவ பீடாதிபதி பேராசிரியர் பா.நிமலதாசன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சார்பில் துணைவேந் தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜாவும் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் சார்பில் அதன் தலைவரும் பட்டயக் கணக்காளருமான மனில் ஜெயசிங்கவும் புரிந்துணர்வு உடன்படிக்கையில் ஒப்பமிடவுள்ளனர். (நி-5-33)

# சிட்டி வியாபாரம் யாழில் மும்முரம்



(யாழ்ப்பாணம்)

இந்து மக்களால் அனுஷ்டிக்கப்படும் கார்த்திகைத் தீபத் திருநாளை முன்னிட்டு யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளிலும் சிட்டி வியாபாரம் மும்முரமாக இடம்பெற்றது. யாழ்.குடாநாட்டின் முக்கிய சந்தையான திருநெல்வேலி பொதுச் சந்தையை அண்டியுள்ள பகுதிகளில் வியாபாரிகள் சிட்டி வியாபாரத்தில் மும்முரமாக ஈடுபட்டனர்.

சிட்டிகள் பல்வேறு வடிவங்களிலும், பல வர்ண நிறங்களிலும் விற்பனையாகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5-18-33)


# நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம், வடமாகாணம் பெறுகைகளுக்கான அழைப்பு

## பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான பெறுகை-2020/2021

தலைவர், வடமாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்கள பெறுகைக் குழுவினால் வடமாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்கள அலுவலகங்களுக்கு சுத்திகரிப்பு மற்றும் பாதுகாப்புச் சேவையை வழங்குவதற்குத் தகைமையுள்ள கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

**Supply of Goods**

| S.N | Details | Safe House Kilinochchi | Safe House Mannar | State Receiving Home Kaithady | Certified School Atchuvely |
|---|---|---|---|---|---|
| | Reference No. | NP/30/02/11/Diet &Con/SH-Kili/ 2022 | NP/30/02/11/Diet& Con /SH-Man/ 2022 | NP/30/02/11/Diet & Con /SRH-Kai/ 2022 | NP/30/02/11/Diet & Con/CS-Achu/ 2022 |
| | Non Refundable Fee | Rs. 2000/- | Rs. 2000/- | Rs. 2000/- | Rs. 2000/- |
| S.N | Type of Food | Amount of Bid Security (Rs) | | | |
| 1 | Fresh Vegetables and Fruits | 20,000 | 15,000 | 10,000 | 20,000 |
| 2 | Meat, Eggs and Sea Foods | 14,000 | 10,000 | 8,000 | 14,000 |
| 3 | Dry Foods Packets, Tins and Bottles | 20,000 | 15,000 | 10,000 | 20,000 |
| 4 | Bakery Products | 1000 | 1000 | 1000 | 1000 |
| 5 | Consumable Items | 20,000 | 15,000 | 10,000 | 20,000 |
| | If quoted all category | 75,000 | 56,000 | 39,000 | 75,000 |

**Supply of Service**

| | Bid Number | Non Refundable Fees | Bid Security Amount |
|---|---|---|---|
| Security Service | NP/30/02/02/SC/2022 | 3,000 | 150,000 |
| Cleaning Service | NP/30/02/02/CS/2022 | 3,000 | 100,000 |

1. கேள்வி கோரலானது தேசிய போட்டி விலைக் கேள்வி முறைப்படி மேற்கொள்ளப்படும்.
2. ஒப்பந்த அளிப்பு செய்வதற்கு, வெற்றிகரமான கேள்விதாரர் கறுப்புப்பட்டியலில் இடம்பெறலாகாது என்பதுடன் பின்வரும் தேவைப்பாடுகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.
   a). கேள்விதாரர் வலிதான வியாபாரப் பதிவினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   b). அத்துடன், பாதுகாப்புச் சேவை வழங்குவதற்கான பாதுகாப்பு அமைச்சினுடைய அனுமதியினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   c). அத்துடன், வடக்கு மாகாணத்தில் தனது பதிவு செய்யப்பட்ட அலுவலகம் அல்லது கிளையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
3. ஒப்பந்த அளிப்பிற்கு தகைமை பெறுவதற்கு கேள்விதாரர்கள் பகுதி 2 - கேள்வித் தரவில் குறிப்பிடப்பட்ட ஆகக்குறைந்த அடிப்படைத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் மேலதிக தகவல்களை **ஆணையாளர், வட மாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம், மீனாட்சி அம்மன் வீதி, பண்ணை, யாழ்ப்பாணம்** எனும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம் என்பதுடன் கேள்வி ஆவணங்களை வேலை நாட்களில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை ஆணையாளர் அலுவலகத்தில் பரிசீலிக்க முடியும்.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கில மொழியில் அமைந்த கேள்வி ஆவணங்களை **ஆணையாளர், வட மாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம், மீனாட்சி அம்மன் வீதி, பண்ணை, யாழ்ப்பாணம்** எனும் முகவரியில் வேலை நாட்களில் 19.11.2021 ஆம் திகதி தொடக்கம் 02.12.2021 ஆம் திகதி வரை 09.00 மணி தொடக்கம் 15.00 மணி வரையான காலப்பகுதியில் எழுத்து மூலமான கோரிக்கையுடன் காசாக ரூபா.1000.00 இனை மீளளிக்கப்படாத வைப்பாகச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.
6. கேள்வி ஆவணங்கள் 03.12.2021 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு முன்பதாக **ஆணையாளர், வட மாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம், மீனாட்சி அம்மன் வீதி, பண்ணை, யாழ்ப்பாணம்** எனும் முகவரிக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் அனைத்தும் பெறுகை நேர முடிவில் கேள்விதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும் என்பதுடன் தாமதமான கேள்விகள் நிராகரிக்கப்படும்.
7. சகல கேள்விகளுடனும் கேள்வி ஆவணத்தில் குறிப்பிட்டதற்கிணங்க பொருத்தமான கேள்விப்பிணை ஒன்று இணைக்கப்படல் வேண்டும். கேள்விப்பிணை சமர்ப்பிக்கப்படாத கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும். முன் ஆயத்த பெறுகைக் கூட்டம் 29.11.2021 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு **வட மாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம், மீனாட்சி அம்மன் வீதி, பண்ணை, யாழ்ப்பாணம்** என்னும் இடத்தில் நடைபெறும்.
8. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியில் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப்பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைகேள்வியாளர்களுக்கான பொறுப்புக்கள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்துச் செய்வதற்கு பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

**இ.குருபரன்**
**தலைவர், திணைக்கள பெறுகைகள் குழு,**
**வட மாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம் - வ.மா**
**மீனாட்சி அம்மன் வீதி,**
**பண்ணை, யாழ்ப்பாணம்.**
**தொலைபேசி :- 021-205-7102 தொலைநகல் 021-205-7103**

C-3037

# கால்பந்தாட்ட தொடர் கரவெட்டி அணி சம்பியன்



யாழ்.மாவட்ட பிரதேச செயலக இளைஞர் அணிகளுக்கிடையிலான கால்பந்தாட்டத் தொடரில் கரவெட்டி பிரதேச செயலக இளைஞர் அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

இதன் இறுதியாட்டம் கடந்த 15 ஆம் திகதி இமையாணன் மத்தி விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது.

இறுதியாட்டத்தில் கரவெட்டி பிரதேச செயலக இளைஞர் அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் பிரதேச செயலக இளைஞர் அணி மோதியது. ஆட்டம் ஆரம்பம் முதல் இறுதி வரை இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபிக்கும் வகையில் விளையாடிக் கொண்டிருந்தனர்.

இதனால் வழங்கப்பட்ட நேரத்தில் இரு அணிகளாலும் கோல் எதனையும் பதிவு செய்ய முடியவில்லை. இதனால் சமநிலை தவிர்ப்பு உதைமூலம் வெற்றி,தோல்வி தீர்மானிக்கப்பட்டது.

இதில் கரவெட்டி பிரதேச செயலக இளைஞர் அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது. (4-6-90)

# மாலைதீவுகளை வெளியேற்றி இறுதியில் நுழைந்தது சீஷெல்ஸ்



இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தினால் நடத்தப்படும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ கிண்ண சர்வ தேச அழைப்பு கால்பந்தாட்டத்தின் இறுதிப் போட்டியில் விளையாடுவதற்கு முதலாவது அணியாக சீஷெல்ஸ் தகுதி பெற்றுக்கொண்டது.

கொழும்பு, குதிரைப் பந்தயத் திடலில் நேற்று முன்தினம் நடைபெற்ற மாலைதீவுகளுடனான தீர்மானம் மிக்க போட்டியை வெற்றி, தோல்வியின்றி முடித்துக் கொண்டதன் மூலம் சீஷெல்ஸ் இறுதிப் போட்டியில் விளையாட தகுதி பெற்றது.

அப்போட்டியில் அவ்வப்போது பரபரப்பு ஏற்பட்ட போதிலும் மைதானம் ஈரழிப்புத் தன்மையைக் கொண்டிருந்ததால் இரண்டு அணியினராலும் தொடர்ச்சியாக திறமையை வெளிப்படுத்த முடியாமல் போனது.

இரண்டு அணிகளும் வெற்றிக் கோலை போட எடுத்த முயற்சிகளும் பலனற்றுப் போயின.

போட்டியின் 77 ஆவது நிமிடத்தில் சீஷெல்ஸ் வீரர் மார்க் ஜெனாரோ மெத்தியோட் முரணாக விளையாடியதன் காரணமாக மத்தியஸ்தர் நிவொன் ரொபேஷின் இரண்டாவது மஞ்சள் அட்டைக்கு இலக்காகி அரங்கை விட்டு வெளியேற்றப்பட்டார்.

அதனைத் தொடர்ந்து 10 வீரர்களுடன் விளையாடிய சீஷெல்ஸ் அணியினர், போட்டியை வெற்றி,தோல்வியின்றி முடித்துக்கொண்டால் போதும் என்பதை நினைவில் நிறுத்தி தடுத்தாடும் உத்தியைக் கையாண்டு அதனை நிறைவேற்றிக் கொண்டனர்.

இறுதியில் எந்த அணியினாலும் கோல் போட முடியாமல் போக ஆட்டம் வெற்றி, தோல்வியின்றி முடிவடைந்தது.

ஏற்கனவே ஒரு வெற்றி, ஒரு வெற்றி,தோல்வியற்ற முடிவு என்ற பெறுபேறுகளைக் கொண்டிருந்த சீஷெல்ஸ் 7 புள்ளிகளுடன் இறுதிப் போட்டியில் விளையாடத் தகுதி பெற்றது.

ஆட்டநாயகனாக சீஷெல்ஸ் அணித் தலைவர் ஸ்டீவ் பெனொய்ட் மாரி தெரிவானார். (4-6)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2451


**ஆதிரை**




**சரவணன்**




**இளமதி**




**யாழினி**




**அபிராம்**




**இனியாளி**




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# இராசிபலன்

18.11.2021
கார்த்திகை 02, வியாழக்கிழமை
சதுர்த்தசி பிற்பகல் 12.49 மணிவரை
பரணி பின்னிரவு 2.34 மணிவரை
சுபநேரம் 7.38-9.08 மணிவரை
இராகுகாலம் 1.38-3.08 மணிவரை
சந்திராஷ்டமம்: சித்திரை
பூரணை விரதம், சர்வாலய தீபம்,
திருவண்ணாமலை தேர்

வளவன்

**மேஷம்** — நல்லவர்களைச் சந்தித்து நலம் காணும் நாள், சிலர் மீது காரணமில்லாமல் கோபம் ஏற்படலாம், வேலைச்சுமை கூடும், ஆரோக்கியத்தில் அக்கறை கூடும்.

**ரிஷபம்** — சிந்தித்து செயற்படவேண்டிய நாள், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும் நாள், காரிய அலைச்சல்கள் சற்று கூடும், மனச்சஞ்சலங்கள் கூடும் வாய்ப்புண்டு.

**மிதுனம்** — பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், இனிய செய்திகள் இல்லம் வந்து சேரலாம், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**கடகம்** — கண்ணியம் மிக்க ஒருவரின் சந்திப்பு இடம்பெறலாம், செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், நண்பர்கள் மத்தியில் பாராட்டும் புகழும் கூடும் நாள்.

**சிம்மம்** — மறைமுக எதிர்ப்புக்கள் அகன்று வியாபார விருத்தி ஏற்படும், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், ஆன்றோர் சந்திப்புண்டு.

**கன்னி** — மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், ஒரு வகையில் வந்த வரவுகள் இன்னொரு வகையில் விரயமாகலாம், திருடர் பயமுண்டு.

**துலாம்** — பொதுநலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், நண்பர்களின் வழியில் நன்மைகள் நடைபெறும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**விருச்சிகம்** — அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், எடுத்த காரியத்தில் முன்னேற்றம் காணும் நாள்.

**தனுசு** — மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும், உறவினர்கள் வழியில் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம், தாழ்ந்த சுபாவமுண்டு, எதிர்பார்ப்புகள் நிறைவேறலாம்.

**மகரம்** — உறவினர் ஒருவர் உங்களுக்கு நல்ல யோசனைகளைக் கூறலாம், வரவேண்டிய பணவரவுகள் வந்து சேரலாம், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள்.

**கும்பம்** — தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், பொன்னான நாள், மூத்த சகோதரர்கள் உங்கள் நலனில் அக்கறை காட்டுவர்.

**மீனம்** — குடும்பத்திற்குத் தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், பொதுநல ஈடுபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டும் நாள்.

துன்பங்கள் நடுவிலே தங்கம் போல் மிளிர்

# உழவர் சந்தை உருவாக்கப்பட வேண்டும்

## புதுக்குடியிருப்பு பிரதேச சபை தீர்மானம்

(அக்கராயன்)

சந்தைகளில் உழவர் சந்தை உருவாக்கப்பட வேண்டும் என புதுக்குடியிருப்பு பிரதேச சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இறுதியாக நடைபெற்ற பிரதேச சபை அமர்வில் சந்தைகளில் உழவர் சந்தைகள் உருவாக்கப்பட வேண்டும் என பிரதேச சபை உறுப்பினர் விடுத்த கோரிக்கை தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது.

இதன்மூலம் விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைப்பதுடன் பொருட்களின் விலை குறைவடையும். அத்துடன் நுகர்வோர் குறைந்த விலையில் பொருட்களை கொள்வனவு செய்ய உழவர் சந்தை வாய்ப்பாக அமையும்.

(நி-5-350)

## மரக்கறி விலை அதிகரிப்பு

# வியாபாரிகள், பொதுமக்கள் பெருமளவில் பாதிப்பு

(மன்னார்)

நாடளாவிய ரீதியில் சீரற்ற காலநிலை காரணமாக மரக்கறிகளின் விலை சடுதியாக அதிகரித்துள்ள நிலையில் மரக்கறிகளை கொள்வனவு செய்யும் மக்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளதுடன் மரக்கறி விற்பனையாளர்களும் வியாபாரம் இன்றி பாதிக்கப்பட்டுள்ளனர்.

அந்தவகையில் நேற்று மன்னார் நகரப்பகுதி சந்தைகளில் மரக்கறிகள் 320 ரூபாய் முதல் 500 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டன.

இதனால் மரக்கறிகளை கொள்வனவு செய்யும் மக்களின் எண்ணிக்கையும் குறைவடைந்ததுடன் விலையேற்றம் காரணமாக விற்பனையாளர்களும் பொதுமக்களும் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(நி-5-285)


# VACANCY

Lion Engineering and Construction is inviting for the following position

**Position:- Assistant Quantity Surveyor**

- HNB and NCT
- Handling Knowledge are MS Excel and MS Word documents are required
- Good Communication Skill are expected

**Position:- Site Supervisor**

- Basic Knowledge in building construction
- Good Communication Skill are expected

Send your CV: lionengineering9@gmail.com

Please Contact 077 558 8835
076 200 4827

**Lion Engineering and Constrction
No.256, K.K.S. Road,
Jaffna.**

(8647)


# புத்தளம் கடற்பரப்பில் டொல்பின் வசந்தம் ஆரம்பம்



(புத்தளம்)

புத்தளம், கற்பிட்டியில் டொல்பின் வசந்த காலம் ஆரம்பமாகியுள்ளது.

சீரற்ற காலநிலை காரணமாக டொல்பின் மீன்களை பார்க்கும் பருவம் ஒரு மாதம் தாமதமாக தொடங்கியுள்ளதாக மீனவர்கள் தெரிவித்தனர்.

எனினும் டொல்பின்களைப் பார்க்கும் பருவம் இம் மாதம் முதல் அடுத்த ஆண்டு ஏப்ரல் இறுதி வரை நீடிக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)


# துயர் பகிர்கின்றோம்

எமது பாடசாலையின்
ஆசிரியை திருமதி
**வசந்தாதேவி குணசேகரம்**
அவர்களின் அன்புத் தாயார்
**சண்முகலிங்கம் இரத்தினம்**
அவர்கள் 19.10.2021 அன்று
காலமாகிவிட்டார். அவரது
ஆத்மா சாந்தியடைய
இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.



**ஆசிரியர் கழகம்
யா/ சிறுப்பிட்டி
அ.த.க.பாடசாலை**

(8690)

# 16 ஆம் ஆண்டு நினைவுச் சங்கமம்



உயர்திரு.
**செல்லையா தம்பித்துரை**

(ஓய்வுபெற்ற நீதிமன்ற முதலியார்,
கொழும்பு துறைமுக அதிகாரசபை
அத்தியட்சகர், மஞ்சவனப்பதி முருகன்
ஆலய நிர்வாக சபை உப தலைவர்)

புவித்துவம் 08.06.1931
அமரத்துவம் 14.12.2005

திதி: சதுர்த்தசி

இணையில்லா சேவைதனை ஊருக்கு உவந்தளித்து
தன்மானத்தோடு தலைநிமிர்ந்து வாழ்ந்து
துணையாயிருந்து தூரிகை பிடித்து உயர்த்திய
எங்கள் அன்புத் தெய்வமே
என்றென்றும் உங்கள் நாமம் நாவில் ஒலித்திட
துணைவேண்டி இறைவனிடம் துதிக்கின்றோம்

(8683)

**குடும்பத்தினர்
ஆடியபாதம் வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.**

# வல்வெட்டித்துறை நகரசபையின் 2022 பாதீடு தோல்வி

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை நகர சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான பாதீடு நேற்று புதன் கிழமை தவிசாளர் செல்வேந்திராவால் சமர்ப்பிக்கப்பட்டது.

குறித்த பாதீடு மீதான வாக்கெடுப்பில் பாதீடு ஒரு வாக் கினால் தோல்வியடைந்தது.

இந்நிலையில் 14 ஆம் நாள் மீண்டும் பாதீடு திருத்தங்களுடன் சமர்ப்பிக்கப் படவுள்ளது. அன்றைய தினமும் பாதீடு தோல்வியடைந்தால், தவிசாளர் பதவி இழக்க நேரிடும்.

வல்வெட்டித்துறை நகர சபையின் முன்னாள் தவிசாளரான கோணலிங்கம் கருணானந்தராசா அண்மையில் கொரோனாத்தொற்றுக்கு இலக்காகி உயிரிழந்தார்.

சுயேட்சைக் குழு உறுப்பினரான எஸ்.செல்வேந்திரா புதிய தவிசாளராக தேர்ந்தெடுக்கப்பட்டு இரண்டு மாத கால பகுதி முடிவுறாத நிலையில் அவரது முதலாவது பாதீடு தோற்கடிக்கப்பட்டுள்ளது. (4-5-33-60)

# பெண்ணொருவர் கசிப்புடன் கைது

(அராலி)

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பொன்னாலை பகுதியில் கசிப்பு விற்பனை செய்து வந்த பெண்ணொருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட பெண்ணிடம் இருந்து 1.5 லீற்றர் கசிப்பு மீட்கப்பட்டது.

வட்டுக்கோட்டை பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் இக் கைது இடம்பெற்றது. கைது செய்யப்பட்ட சந்தேகநபரை மல்லாகம் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (4-5-104)

# மாநகரசபை ஆணையாளருக்கு கொரோனாத் தொற்று

(குப்பிழான்)

யாழ்.மாநகர சபை ஆணையாளர் த.ஜெயசீலனுக்கு கொரோனா நோய்த் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனால், அவர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார் என சுகாதாரத்துறையினர் தெரிவித்தனர்.

மாநகர சபை ஆணையாளருக்கு கொவிட்-19 நோய் அறிகுறிகள் காணப்பட்டதால் முன்னெடுக்கப்பட்ட பரிசோதனையில் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.

இதனையடுத்து அவருடன் பணியாற்றும் 15 உத்தியோகத்தர்களிடம் பி.சி.ஆர்.பரிசோதனை முன்னெடுக்கப்படவுள்ளதாக சுகாதாரத் துறையினர் தெரிவித்தனர். (4-5-18-33)

# பாலம் அமைக்கக் கோரி கண்டாவளையில் ஆர்ப்பாட்டம்



(தருமபுரம்)

பாலத்தினை புனரமைத்து தருமாறு கோரி கண்டாவளையில் பொதுமக்களால் ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கல்மடுநகர் ரங்கன் குடியிருப்பு பகுதியில் புதிய பாலம் அமைப்பதற்காக பயன்பாட்டில் இருந்த பாலத்தினை முற்றாக அகற்றி விட்டனர். பல மாதங்களாகியும் புனரமைப்புப் பணிகள் எதுவும் இடம்பெறவில்லை. இதனால் அங்குள்ள மக்கள் பாரிய சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

தற்போது தனியார் காணி ஒன்றின் ஊடாகவே தாம் பயணிப்பதாக ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர். (நி-5-316)

# 80 சதவீதமான மாணவர்களுக்கு பைசர்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட தென்மராட்சிக் கல்வி வலய பாடசாலை மாணவர்களில் 16-19 வயதுப் பிரிவினர் 80 சதவீதமானோர் பைசர் தடுப்பூசியைப் பெற்றிருப்பதாக சாவகச்சேரி சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

அத்துடன் கொடிகாமம் மற்றும் மட்டுவில் கிராமப் பாடசாலைகள் இரண்டில் நூறு சதவீதமான மாணவர்கள் பைசர் தடுப்பூசியைப் பெற்றிருப்பதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டினர். (4-5-30)

# அனுமதி பெற்றால் மட்டுமே நிகழ்வுகள் நடத்தலாம்

## சுகாதாரத் தரப்பு

(சாவகச்சேரி)

தென்மராட்சியில் எந்த நிகழ்வாக இருந்தாலும் சுகாதாரப் பகுதியிடம் முன் அனுமதி பெறப்படல் அவசியம் என சாவகச்சேரி சுகாதாரப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

அத்துடன் பேருந்துகள் மற்றும் ஆலயங்களில் பொதுமக்கள் எந்தவிதமான கொரோனா தடுப்பு சுகாதார நடைமுறைகளையும் பின்பற்றாது அசண்டையீனமாக செயற்படுவதை அவதானிக்க முடிவதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (4-5-30)

# வாகன இலக்கத் தகடுகளை பெற்றுக் கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் போக்குவரத்து திணைக்கள தலைமை அலுவலகத்திலிருந்து யாழ்.அலுவலகத்திற்கு கிடைக்கப்பெற்ற வாகன இலக்கத்தகடுகளின் பட்டியல், யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேச செயலகங்களிலும் மாவட்ட செயலகத்திலுள்ள மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்திலும் பொதுமக்களின் பார்வைக்காக காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் மாவட்டச் செயலக இணையத்தளத்திலும் பார்வையிடலாம். இதற்கமைய, புதிதாக வாகனங்களைப் பதிவு செய்த உரிமையாளர்கள் வாகனப் பதிவுப்புத்தகம், தேசிய அடையாள அட்டை என்பவற்றையும், மாகாணங்களுக்கிடையே வாகன உரிமை மாற்றம் பெற்றவர்கள் மேற்குறித்த இரு ஆவணங்களுடன் பழைய வாகன இலக்கத்தகடுகள் மற்றும் வாகன இலக்கம் பொறித்த ஒட்டும் தாள் என்பவற்றையும், யாழ்.மாவட்ட மோட்டார் வாகனப் போக்குவரத்து அலுவலகத்தில் சமர்ப்பித்து தங்கள் வாகனங்களுக்குரிய இலக்கத்தகடுகளைப் பெற்றுக்கொள்ளுமாறு யாழ்.மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்கள பிரதி ஆணையாளர் ய.பரந்தாமன் அறிவித்துள்ளார். (4-5)




தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் வடமாகாண மரநடுகை மாதத்தை முன்னிட்டுப் பல்வேறு இடங்களிலும் மரநடுகையை மேற்கொண்டு வருகிறது. இதன் ஒரு கட்டமாக கடந்த 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பளையில் மரநடுகை இடம்பெற்றது.

# விநாயகர் விரதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண்ணார்பண்ணை வடகிழக்கு கலட்டி வீரகத்தி விநாயகர் தேவஸ்தான விநாயகர் விரதம் (பிள்ளையார் கதை) நாளை மறுதினம் சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது. தினமும் முன்பகல் 11.30 மணிக்கு அபிஷேகம் மூலமூர்த்தி பூஜை, வசந்த மண்டபப் பூஜையுடன் பிள்ளையார் கதைப்படிப்பு நடைபெறும்.

எதிர்வரும் 9 ஆம் திகதி விநாயர் சஷ்டியை முன்னிட்டு மாலை 3.00 மணிக்கு ஸ்நபன அபிஷேகம், மூலமூர்த்தி பூஜை, வசந்த மண்டபப்பூஜையுடன் விநாயகப் பெருமான் திருவீதிவலம் வந்து பிள்ளையார் கதை படிப்பு பூர்த்தியாகும். மேலும் அன்றைய தினம் சிவகுரு ஆதீன குருமுதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகளின் அருளுரையும் இடம்பெறும் என ஆலய பிரதமகுரு அறிவித்துள்ளார். (4-5)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 260 | 250 | 280 |
| உருளைக்கிழங்கு | 200 | 190 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 120 | 120 | 140 | 140 |
| தக்காளி | 300 | 340 | 400 | 450 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 50 | 60 | 40 |
| கோவா | 180 | 200 | 240 | 240 |
| கரட் | 160 | 300 | 320 | 320 |
| பூசணி | 60 | 60 | 60 | 50 |
| புடோல் | 240 | 240 | 200 | 200 |
| வாழைக்காய் | 60 | 50 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 200 | 180 | 200 | 250 |
| பெரிய வெங்காயம் | 200 | 160 | 160 | 160 |
| பாகற்காய் | 400 | 500 | 500 | 600 |
| வெண்டிக்காய் | 200 | 200 | 200 | 200 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 130 | 140 |
| பயற்றங்காய் | 250 | 300 | 240 | 300 |
| லீக்ஸ் | 250 | 280 | 300 | 350 |
| பீற்றூட் | 120 | 80 | 80 | 120 |
| கறிமிளகாய் | 600 | 380 | 500 | 400 |
| முருங்கைக்காய் | 400 | 400 | 500 | 400 |
| போஞ்சி | 450 | 380 | 400 | 480 |
| கத்தரிதம்புள்ள | 280 | 220 | - | 250 |
| கீரை - 1 பிடி | 100 | 90 | - | 100 |
| தேசிக்காய் | 400 | 400 | 400 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 85 | 70 | 70-100 |
| இராசவள்ளி | 200 | 280 | 200 | 240 |
| வெங்காயப்பூ | --- | 350 | - | - |
| முள்ளங்கி | --- | 140 | 200 | 160 |
| பொன்னாங்காணி | 50 | 50 | 60 | 40 |
| வல்லாரை | 20 | 90 | 20 | 30 |
| ஈரப்பலா | --- | - | 70 | 120 |

# ஆதனப் பெயர் மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம்-09 அத்திக்காட்டு வடக்கு ஒழுங்கையில் ஆதன இல.34/4 என்ற இலக்கம் கொண்ட ஆதனமானது கனகரட்ணம் பெண் புவனேஸ்வரி என்ற பெயரிலே ஆதனப் பதிவேட்டில் பதியப்பட்டு காணப்படுகிறது.

குறித்த ஆதனத்தில் சொரியலாய் 1/6 பங்கு பிரசித்த நொத்தாரிசு சுப்பிரமணியம் செல்வநாயகராசா மகாதேவா முகதாவில் 1976.07.10ம் திகதியில் 5746ம் இலக்க அறுதி உறுதி மூலம் கனகரத்தினம் செல்வராசா என்பவரிடமிருந்து கந்தையா கனகரத்தினம் என்பவருக்கு அறுதியாக வழங்கியுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

பிரசித்த நொத்தாரிசு புஸ்பரட்ணம் அபிதன் முகதாவில் 2021.01.18ம் திகதி 71ம் இலக்க வெளிப்படுத்தல் உறுதியில் குறித்த கந்தையா கனகரத்தினம் மரணசாதனம் ஏதும் நிறைவேற்றாமலும் நிர்வகிக்கப்பட வேண்டிய பெறுமதிக்கும் குறைவான பெறுமதியுடைய சொத்துக்களையும் விட்டுக் காலஞ்செல்ல குறித்த ஆதனம் முழுவதும் கனகரத்தினம் தவராசா, கனகரத்தினம் செல்வராசா, கனகரத்தினம் இந்திராணி, கனகரத்தினம் யோகராணி, கனகரத்தினம் நீலராணி ஆகியோரிற்கு சொந்தமானதாய் இருந்ததென்றும் இவர்களில் கனகரத்தினம் தவராசாவைத் தவிர வேறு எவரும் திருமணம் முடிக்காமலும் அடியற்றும் மரணசாதனம் ஏதும் நிறைவேற்றாமலும் காலஞ்சென்றமையினால் கனகரத்தினம் தவராசாவின் பிள்ளைகளான தவராசா பரணிகாந், தவராசா சரணிகாந், தவராசா தரணிகாந் ஆகியோரிற்கு முதுசமாக வந்தடைந்ததாக கூறப்பட்டுள்ளது.

ஆதன அட்டவணை:- வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப் பகுதி சுண்டிக்குளி கோவிற்பற்று சிவியாதெரு இறை நல்லூர் பிரதேச செயலர் பிரிவு, யாழ்ப்பாணம் மாநகர சபை **J/96** அரியாலை மத்தி தெற்கு கிராமசேவையாளர் பிரிவுக்குட்பட்ட "அத்திக்காட்டு நடுவளவும் வடலித் தோட்டமும் அத்திக்காட்டு மேற்கு வளவும் அத்திக்காட்டு வளவு கிழக்கும் பிராயடித்தாழ்வும் புலமும் அத்திக்காட்டு வளவும்" நில.பர 35 1/4 இது தற்போது 2021ம் ஆண்டு தைமாதம் 02ம் திகதி நில அளவையாளர் S.சுப்பிரமணியம் முகதாவில் 0083ம் இலக்கத்தில் விஸ்தரிக்கப்பட்ட படத்தில் முதலாம் துண்டாகக் காட்டப்பட்டபடி விஸ்தீரணம் நிலப்பரப்பு இருபத்தியாறு குளி ஏழு தசம் ஐந்து (நில.பர 26 குளி 7.5) இதற்கு எல்லை

**கிழக்கு: புவனேந்திரன் ஜயலட்சுமியின் ஆதனம்**
**வடக்கு: தம்பு கதிர்வேலுவின் ஆதனம்**
**மேற்கு: தனராசா தேவகியின் ஆதனம்**
**தெற்கு: தனராசா தேவகியின் ஆதனமும் அரசடி வீதியும் இதடங்கலும்**

தற்போது தவராசா பரணிகாந், தவராசா சரணிகாந், தவராசா தரணிகாந் ஆகியோர் இவ்வாதனத்தை தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் பகுதிக்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத் தருமாறும், உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது தவராசா பரணிகாந், தவராசா சரணிகாந், தவராசா தரணிகாந் என்னும் பெயரிற்கு பெயர் மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாதனம் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகர சபை பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**விஸ்வலிங்கம் மணிவண்ணன்,**
**கௌரவ முதல்வர், மாநகர சபை, யாழ்ப்பாணம்.** (C-3036)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1991 இந்து நட்சத்திரம்: கேட்டை
உயரம்:5'7"
கி.பா: செவ்9 இல் சூரி 9இல்
தகைமை/தொழில்:**MBBS Doctor**
எதிர்பார்ப்பு:படித்த வேலை பார்க்கும் பெண்
தொ.இ: **B/12137**

பிறப்பு:1991 இந்து நட்சத்திரம்: பூராடம் 2
உயரம்:-5'5"
கி.பா: 46 3/4 செவ் 6 இல் சூரி2 இல்
தகைமை/தொழில்:**O/L**வியாபாரம் சொந்தக் கடை
எதிர்பார்ப்பு:சாதாரண படித்த பெண்
தொ.இ: **B/12141**

பிறப்பு: 1992இந்து நட்சத்திரம்:-மூலம் 1
கி.பா: 36செவ் 6 இல் சூரி 10 இல்
உயரம்:5'4"
தகைமை/தொழில்: கல்வியியற் கல்லூரி **Diploma** விஞ்ஞான ஆசிரியர்
எதிர்பார்ப்பு:தகுந்த அரச, தனியார் உத்தியோகம் பார்க்கும் பெண்
தொ.இ: **B/12142**

பிறப்பு:1989இந்து நட்சத்திரம்: பூராடம்
கி.பா: 57 2செவ் சூரி1இல்
உயரம்:5'5"
தகைமை/தொழில்:**O/L** வியாபாரம் (லண்டன்)
எதிர்பார்ப்பு:பட்டதாரி அல்லது உயர்தரம்
தொ.இ: **B/12144**

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1996 இந்து நட்சத்திரம்: ரேவதி 2
கி.பா: 26 ½ செவ் 6சூரி6இல்
உயரம்:5'5"
தகைமை/தொழில்:. **HND,IT**
எதிர்பார்ப்பு:தகுந்த மணமகன்
தொ.இ:**G/12149**

பிறப்பு:1985இந்து நட்சத்திரம்:சித்திரை
கி.பா:43 செவ் 9சூரி8இல்
உயரம்:5'
தகைமை/தொழில்:**A/L** பட்டதாரி முடிக்கவில்லை. **UK PR** முடிக்கவில்லை
எதிர்பார்ப்பு:-விவாகரத்தானவர். விவாகரத்தாகி பிள்ளைகள் இல்லாதவர் ஏற்றுக் கொள்ளப்படும்.
தொ.இ:**G/12150**

பிறப்பு:1995 இந்து நட்சத்திரம்:அவிட்டம் 1
கி.பா:செவ்10சூரி9இல்
உயரம்:5'7"
தகைமை/தொழில்:சட்டத்தரணி அவுஸ்திரேலியா
எதிர்பார்ப்பு:உயர்பதவி அவுஸ்திரேலியா நியூசிலாந்து விரும்பத்தக்கது
தொ.இ:**G/12152**

பிறப்பு: 1996இந்து நட்சத்திரம்:கேட்டை 1
கி.பா:செவ் 1 சூரி 1இல் உயரம்:5'6'
தகைமை/தொழில்: **Computer Science**
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்
தொ.இ:**G/12153**

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.**


# பைசர் மட்டுமே இனி இறக்குமதி




(கொழும்பு)

பைசர் தடுப்பூசிகளை மாத்திரம் நாட்டிற்கு இறக்குமதி செய்ய தீர்மானித்துள்ளதாக இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்தார்.

முதலாவது மற்றும் 2ஆவது டோஸ்களை வழங்குவதற்கு போதுமான ஏனைய தடுப்பூசிகள் நாட்டில் இருப்பதால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாகவும் அதற்கமைவாக 14.5 மில்லியன் பைசர் தடுப்பூசிகளை கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (நி-5)


## கலட்டி ஐக்கிய சனசமூக நிலையம்

**கரணவாய் கிழக்கு, கரவெட்டி.**

கலட்டி ஐக்கிய சனசமூக நிலையத்தின்
நாற்பது ஆண்டு நிறைவை முன்னிட்டு
**"கலட்டித்தாய்"**
**சிறப்பு மலர் வெளியீட்டு விழா**

**காலம் : 18.11.2021 (வியாழக்கிழமை)**
**நேரம் : மு.ப. 09.30 மணி**
**இடம் : ஜெயச்சந்திரன் கலையரங்கு**

தலைமை
**திரு.சீவரத்தினம் கங்காதரன்**
(நிலையத் தலைவர்)

பிரதம விருந்தினர்
**உயர்திரு.ஈஸ்வரானந்தம் தயாரூபன்**
(பிரதேச செயலர், பிரதேச செயலகம், கரவெட்டி)

அருளாசியுரை
**சிவஸ்ரீ சோமதேவ குருக்கள் நிதர்ஷன சர்மா**

சிறப்பு விருந்தினர்
**திருவாளர். தங்கவேலாயுதம் ஐங்கரன்**
(தவிசாளர், வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை)

கௌரவ விருந்தினர்
**திருவாளர் கிருஷ்ணராஜா கிருஷ்ணமேனன்**
(கிராம அலுவலர், கரணவாய் கிழக்கு)

மலராசிரியர்
**திரு.இ.கருணாகரன்**

நூல் ஆய்வுரை
**கலாநிதி சு.குணேஸ்வரன்**

முதற்பிரதி பெறுபவர்கள்
**திரு.இராசலிங்கம் செல்வலிங்கம்**
**திரு.அண்ணாச்சாமி ஜீவகன்**

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**
**(இ)** **நிர்வாகத்தினர்**


# உணவில் புழுக்கள்

**அம்பன கொரோனா நோயாளர்கள் குற்றச்சாட்டு**

(மாத்தளை)

நாவுல - அம்பன கொரோனா சிகிச்சை மையத்தில் தொற்றாளர்களுக்கு வழங்கப்படும் உணவில் புழுக்கள் இருப்பதாக நோயாளர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

வைத்தியசாலையின் மேற்பார்வையின் கீழ் தமக்கு உணவு வழங்கப்படுவதாகவும் இவ்வாறு வழங்கப்படும் உணவில் புழுக்கள் காணப்படுவதாகவும் நோயாளர்கள் தெரிவித்தனர். (நி-5)

# இரத்ததான முகாம்

(குப்பிழான்)

ஹாட்லியின் மைந்தர்கள் நினைவாக பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவர்களினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இரத்ததான முகாம் இன்று காலை 8.30 மணி முதல் மாலை 2 மணி வரை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் நடைபெறும்.

எனவே, மேற்படி இரத்ததான முகாமில் அனைத்துக் குருதிக் கொடையாளர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (4-5-18)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்



சிவத்திரு
**வைத்திலிங்கம் ஜெகதாஸ்**
**(சமாதான நீதவான்)**
தஞ்சாவூர் பல்கலைக்கழகத்தில் 14.11.2021 அன்று கலைமாணி (B.A. தமிழ்) பட்டத்தினைப் பெற்றுக் கொண்ட இலங்கை முதலுதவிச் சங்கம், இலங்கை இந்து சமயத் தொண்டர் சபை, தேசிய கண்காணிப்பாளரும் சேவையாளருமான
சிவத்திரு
**வைத்திலிங்கம் ஜெகதாஸ்**
அவர்களை பாராட்டி வாழ்த்துவதுடன் மேலும் பல பட்டங்களைப் பெற்று வையகம் போற்ற உயர்ந்திட வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.
(8654)

**தலைமைச் செயலகம்,**
**இலங்கை முதலுதவிச் சங்கம்,**
**இலங்கை இந்து சமயத் தொண்டர் சபை.**

# நீடித்த ஆயுள் தரும் கார்த்திகை தீப வழிபாடு

இறைவனை ஜோதி வடிவாக வழிபடுவது தொன்றுதொட்டு இருந்து வரும் மரபு ஆகும். ''ஆதியும் அந்தமும் இல்லா அருட்பெருஞ்சோதி'' என மாணிக்கவாசகர் கூறுவார்.

நினைத்தால் முக்தி தரும் திருவண்ணாமலையில் சிவபெருமான் ஜோதி வடிவாக தோன்றினார். இதை நினைவுகூரும் விதத்தில் ஆண்டுதோறும் கார்த்திகை தீபத்தின் போது, திருவண்ணாமலையில் 2,668 அடி உயர மலை உச்சியில் மகா தீபம் ஏற்றப்படுகின்றது. தீப வழிபாடு என்பது நீண்ட நெடிய காலமாக நடைமுறையில் இருந்து வருகிறது.

வட நாட்டில் தீப வழிபாடு என்பது 'தீபாவளி' என்றும் , தெற்கே 'கார்த்திகை தீபம்' என்றும் கொண்டாடப்படுகின்றது. தேவாரப் பாடல் ஆசிரியர்களில் ஒருவரான திருஞான சம்பந்தர் மயிலாப்பூரில் பாடிய திருப்பதிகத்தில் பூம்பாவை என்ற பெண்ணுக்கு உயிர் கொடுப்பதற்காக பாடிய போது... 'கார்த்திகை விளக்கீடு காணாது போதியோ பூம்பாவாய்' என்று பாடியுள்ளார்.

இதன் மூலம் கி.பி. 7,8 ஆம் நூற்றாண்டில் இருந்தே, கார்த்திகை வழிபாடு சிறப்பாகக் கொண்டாடப்படுவது தெரிகிறது. தீபத்தின் நடுவில் மகாலட்சுமியும், ஒளியில் சரஸ்வதியும், வெப்பத்தில் பார்வதி தேவியும் எழுந்தருள்வதாக ஐதீகம். எனவே தீபம் ஏற்றி வழிபடுவதன் மூலம் முப்பெருந்தேவியரின் திருவருளையும் ஒருங்கே பெறலாம்.



### அடிமுடி காணாத வரலாறு

படைக்கும் கடவுளாகிய பிரம்மாவுக்கும்,காத்தல் கடவுளாகிய திருமாலுக்கும் இடையே 'யார் பெரியவர்?' என்ற போட்டி ஏற்பட்டது. அப்போது சிவபெருமான் ஆதியும், அந்தமும் இல்லாத அருட்பெருஞ்ஜோதியாய் தோன்றினார். 'இருவரில் யார் எனது அடியையோ (பாதம்) , முடியையோ காண்கிறீர்களோ அவர்களே பெரியவர்' எனக் கூறினார்.

திருமால் , வராக உருவம் கொண்டு திருவடிகளை காணச் சென்றார். பிரம்மா அன்னப்பறவை உருக்கொண்டு திருமுடியைக் காணப் பறந்து சென்றார். ஆனால் இருவரும் அடியையோ, முடியையோ காண முடியாமல், அகங்காரங்கள் அழிய பெற்றவர்களாக சிவபரம்பொருளே உலகின் முழுமுதற் பரம்பொருள் என்பதை உணர்ந்து கொண்டனர். தங்களது பிழையை பொறுத்து அருளுமாறு சிவபெருமானை பிரார்த்தனை செய்தனர்.

உடனே சிவன்,சிவலிங்க திருஉருவத்தோடு ஜோதிப் பிழம்பில் இருந்து வெளிப்பட்டார். அப்போது திருமால் , பிரம்மா இருவரும் சிவபெருமானை வழிபட்டு உண்மை ஞானம் பெற்றனர். ஜோதிப் பிழம்பு அருணாசலமானது. அதில் இருந்து தோன்றிய சிவலிங்கம் அருணாசலேசுவரர் ஆனார். இந்த நிகழ்ச்சியை நினைவுகூரும் விதத்தில் தான், கார்த்திகை மாதத்தில் கார்த்திகை தீபம் ஏற்றப்படுகிறது. மாதந்தோறும் கார்த்திகை விரத நாள் வருகிறது. கார்த்திகை மாதம் வரும் கார்த்திகை தினத்தை 'திருக்கார்த்திகை' என்பர்.

### பூஜைக்கேற்ற விளக்கு

குத்து விளக்கு அல்லது பூஜை விளக்குகளுக்கு வெள்ளி விளக்கு சிறப்புடையது. ஐம்பொன் விளக்கு அடுத்து சிறப்புடையது. வெண்கல விளக்கு அடுத்து சிறப்புடையது. பித்தளை விளக்கு அதற்கு அடுத்து சிறப்புடையது. எக்காரணம் கொண்டும் எவர்சில்வர் விளக்கை பூஜைக்கோ, வீடுகளில் ஏற்றுவதற்கோ பயன்படுத்தக் கூடாது. அதைவிட மண் அகல் விளக்கு உத்தமம்.

நெய், விளக்கெண்ணெய், வேப்ப எண்ணெய் , இலுப்பை எண்ணெய், தேங்காய் எண்ணெய் கலந்து அதன் மூலம் தீபம் ஏற்றி, எவரொருவர் ஒரு மண்டலம் (45 அல்லது 48 நாட்கள்) பூஜை செய்கிறார்களோ அவர்களுக்குத் தேவியின் அருள் கிடைக்கும்.

### தீபம் ஏற்றும் முறை

முதலில் கிழக்கு நோக்கி ஒரு திரியும், 2 ஆவது வடக்கு நோக்கி ஒரு திரியும், 3 ஆவது மேற்கு நோக்கி, இரு திரியும் ஏற்ற வேண்டும்.தெற்கு நோக்கி தீபம் ஏற்றக் கூடாது. குளிர்விக்கும் போது , முதலில் மேற்கே உள்ள திரிகளையும், 2 ஆவது வடக்கே உள்ள திரியையும், 3 ஆவது கிழக்கே உள்ள திரியையும் குளிர்விக்க வேண்டும். ஊதி அணைக்கக் கூடாது. மேற்கூறிய முறைப்படி 8 நாட்களுக்கு தினமும் 1 மணி நேரம் வீதம் நெய்யில் தாமரை நூல் திரியில் தீபம் ஏற்றி எரிய விடுவது நமது வீட்டில் உள்ள வாஸ்து குற்றங்களை சரி செய்யும். குழந்தைகள் செய்யும் சேஷ்டைகள் குறையும். பிரிந்த தம்பதிகள் ஒன்று சேருவார்கள்.

## 580 ஆண்டுகளின் பின் நீண்ட நேர சந்திர கிரகணம்

580. ஆண்டுகளில் மிக நீண்ட பகுதி சந்திர கிரகணம் நாளை வெள்ளிக்கிழமை நிகழும், நிலவின் 97 சதவீதம் பூமியின் நிழலால் மூடப்பட்டிருக்கும் என்பதால், இது பகுதி சந்திர கிரகணம் எனப்படுகிறது. இறுதியாக இதுபோன்ற சந்திர கிரகணம் 1440 பெப்ரவரி 18 அன்று ஏற்பட்டது,

மேலும் இதுபோன்ற மற்றொரு நிகழ்வினை காண 2669 பெப்ரவரி 8 ஆம் திகதி வரை காத்திருக்க வேண்டும் என்றும் வானியல் ஆர்வலர்கள் கணித்துள்ளனர்.

இலங்கை நேரப்படி சந்திர கிரகணம் மதியம் 12.48 மணிக்கு தொடங்கி மாலை 4.17 மணிக்கு முடிவடையும்.

இந்த பகுதி சந்திர கிரகணம் வட அமெரிக்கா, தென் அமெரிக்கா, கிழக்கு ஆசியா, அவுஸ்திரேலியா மற்றும் பசுபிக் பகுதிகளிலும் தெரியும். (நி-5)

# உகண்டா தலைநகரில் தற்கொலைத் தாக்குதல்

(கம்பாலா)

உகண்டா தலைநகர் கம்பாலாவை குறிவைத்து தற்கொலை குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்த தாக்குதலில் 3 பேர் உயிரிழந்துள்ளதுடன் 30 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளதாக அந்நாட்டு பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிள்களில் வந்த மூன்று தாக்குதல்காரர்கள் பாராளுமன்றம் மற்றும் நகரின் பொலிஸ் தலைமையகத்திற்கு அருகில் தங்களைத்




தாங்களே வெடிக்கச் செய்துள்ளனர்.

குண்டுவெடிப்பால் பலரின் உடல்கள் வீதிகளில் சிதறி இருப்பதாக தெரிவித்துள்ள பொலிஸார், உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிக்கலாம் என்றும் தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதலுக்கு ஐ.எஸ்.அமைப்பு பொறுப்பேற்றுள்ளதாக அமாக் செய்தி நிறுவனம் தெரிவித்தது. (நி)

# 34.9 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு ஏலம் போன ஓவியம்



(நியூயோர்க்)

மெக்சிகன் கலைஞரான ஃப்ரிடா கஹ்லோவின் சுய உருவ ஓவியம் நேற்று முன்தினம் செவ்வாயன்று நியூயோர்க்கில் நடைபெற்ற ஏலத்தில் 34.9 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. லத்தீன் அமெரிக்க கலைப்படைப்புக்கு ஏலத்தில் கொடுக்கப்பட்ட அதிகபட்ச விலை இதுவாகும்.

இந்த விற்பனையானது ஓவியரின் முந்தைய பொது ஏல சாதனையான 8 மில்லியன் அமெரிக்க டொலர் சாதனையையும் விட நான்கு மடங்கு அதிகம் ஆகும்.

ஓவியர் இறப்பதற்கு ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு வரையப்பட்ட இந்த ஓவியம், கஹ்லோவின் இறுதி சுய உருவப்படமாக கருதப்படுகிறது. (நி-5)

# செயற்கைக் கோள்களை அழிக்கும் ஏவுகணை

## பரிசோதித்த ரஷ்யா; அமெரிக்கா கண்டனம்

(வோஷிங்டன்)

விண்வெளியில் வலம் வரும் செயற்கைக் கோள்களை தாக்கி அழிக்கும் ஏவுகணையை ரஷ்யா கடந்த திங்கட்கிழமை சோதித்தது. இந்த ஏவுகணை சோதனையில், ரஷ்யாவுக்கு சொந்தமான செயற்கைக்கோள் ஒன்று வெடித்து சிதறியது.

இது விண்வெளியில் குப்பைகளை உருவாக்கியதால், சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தி உள்ளது.


மேலும் சர்வதேச விண்வெளி நிலையத்தில் உள்ள விண்வெளி வீரர்கள் பாதுகாப்பு காரணங்களை முன்னிட்டு விண்கலத்துக்குள் செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இதனிடையே ரஷ்யாவின் இந்த ஏவுகணை சோதனை ஆபத்தான மற்றும் பொறுப்பற்றது என கூறி அமெரிக்கா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. (நி-5)

# சிலிண்டருக்குத் தட்டுப்பாடு விறகுக்கு மாறும் மக்கள்

(வவுனியா)

**நாட்டில் எரிவாயு சிலிண்டருக்கு பெரும் தட்டுப்பாடு நிலவிவரும் நிலையில் விறகு கொள்வனவு செய்வதற்கு மக்கள் மாற்றமடைந்து வருவதால் விறகு விற்பனை அதிகரித்து வருகிறது.**

விறகு வியாபாரிகள் தூர இடங்களுக்கு சென்று விறகுகளை துவிச்சக்கரவண்டிகளிலும், மோட்டார் சைக்கிள்களிலும் ஏற்றிவந்து நகரிலுள்ளவர்களுக்கு விற்பனை செய்வதில் மும்முரமாக செயற்பட்டு வருகின்றனர் .



எரிவாயுவுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவி வருகின்றதால் எரிவாயு பெற்றுக் கொள்வதை தவிர்த்துவிட்டு விறகு கொள்வனவு செய்வதில் மக்கள் தற்போது ஆர்வம் காட்டிவருகின்றனர் .

(4-5-299)

# சோதனை நடவடிக்கை இருவருக்கு எதிராக வழக்கு



(வவுனியா)

வவுனியாவில் சுகாதார நடைமுறைகள் குறித்து திடீர் சோதனை நடவடிக்கை ஒன்றை முன்னெடுத்திருந்ததுடன், இருவருக்கு எதிராக வழக்குத் தாக்கலும் செய்யப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

வவுனியா மாவட்டத்தில் மீண்டும் கொவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலையில் அதனை கட்டுப்படுத்தும் செயற்பாட்டில் சுகாதாரப் பிரிவினர் ஈடுபட்டுள்ளனர். அதன் ஒரு கட்டமாக சுகாதாரப் பிரிவினர், இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் இணைந்து வவுனியா நகரப் பகுதியில் சுகாதார நடைமுறைகள் குறித்து திடீர் கண்காணிப்பு சோதனை நடவடிக்கை ஒன்றை நேற்று முன்னெடுத்தனர்.

இதன்போது முகக்கவசம் அணியாது பழைய பேருந்து நிலையப் பகுதியில் நடமாடிய ஒருவருக்கு எதிராகவும், முகக்கவசம் அணியாது நகரப் பகுதியில் நடமாடிய ஒருவருக்கு எதிராகவும் என இரண்டு பேருக்கு எதிராக வவுனியா நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர். (4-5-250)

# அடிப்படை வசதிகள் ஏதுமின்றி ஒதியமலை மாதிரிக் கிராமம்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஒதியமலை கிராம உத்தியோகத்தர் பிரிவில் கடந்த 2017 ஆம் ஆண்டு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் 26 பேருக்கான வீட்டுத்திட்டம் ஒன்று அமைக்கப்பட்டது.




வீட்டுத்திட்டம் அமைக்கப்பட்டு மக்கள் குடியேறிய போதும் உரிய அடிப்படை வசதிகள் இன்னும் செய்து தரப்படவில்லை என மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இதனால் அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் அரைவாசிப்பேர் அங்கிருந்து சென்றுவிட்டனர்.

அத்துடன் காட்டு யானைகள் அட்டகாசமும் அதிகரித்துள்ளது. எனவே எமக்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித்தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(4-5-281)



ஹாட்லியின் மைந்தர்களது 22 ஆம் ஆண்டு நினைவு நாள் யாழ்ப்பாணம் வடமராட்சி இன்பர்சிட்டி கடற்கரையில் அவர்களது குடும்பத்தினர் மற்றும் நண்பர்களால் உணர்வுபூர்வமாக கடைப்பிடிக்கப்பட்டது. (படம்- மகாலிங்கம்- சிவசாந்தன்)

# போலி வாகன இலக்கத் தகடுகளை அச்சிட்ட இளைஞன் கைது

(வவுனியா)

வவுனியாவில் வாகன இலக்கத்தகடுகளை போலியாக அச்சிட்டு வழங்கி வந்த இளை ஞன் ஒருவர் விசேட அதிரடி படையினரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார்.

வவுனியா தாண்டிக்குளம் பகுதியிலுள்ள தனது வீட்டில் வாகனத்திற்குரிய இலக்கத் தகடுகளை போலியாக தயாரித்து வழங்கி வந்ததாக முல்லைத்தீவு விசேட அதிரடிப்படையினருக்கு இரகசிய தகவல் கிடைக்கப் பெற்றது.

குறித்த விடயம் தொடர்பாக முல்லைத்தீவு விசேட அதிரடிப் படையினர் மேற்கொண்ட நடவடிக்கையில் குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

தகடு அச்சிடுவதற்கு பயன்படுத்தியதாக சந் தேகிக்கப்படும் கணனி மற்றும் பிறிண்டர் , இலக்கத்தகடு , அரச இலட்சனை போன்ற பொரு ட்கள் கைப்பற்றப்பட்டு வவுனியா பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

(4-5-250-299)

# கால்நடைகளை கட்டுப்படுத்த பிரதேசசபை முன்வர வேண்டும்

## பொதுமக்கள் கோரிக்கை

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கட்டாக்காலி கால்நடைகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளதாகவும் இதனால் வீதியில் பயணிப்போர் அசௌகரியங்களுக்குள்ளாகி வருவதாகவும் பொதுமக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

இரவு நேரங்களில் வீதிகளில் நிற்கும் கட்டாக்காலி கால்நடைகளால் நாளாந்தம் விபத்துக்கள் ஏற்பட்டு பலர் பாதிக்கப்படுவதோடு கால்நடைகளும் இறக்கின்றன.

கால்நடை உரிமையாளர்கள் உரிய வகையில் பராமரிக்க வேண்டும் எனவும் தவறும் பட்சத்தில் பிரதேச சபை உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (4-5-281)

# வவுனியாவில் ஆரம்பப் பிரிவு ஆசிரியர் இருவருக்கு தொற்று

(குருமன்காடு)

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் ஆரம்ப பிரிவுக்கு கற்பிக்கும் இரு ஆசிரியர்களுக்கு கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர். குறித்த பாடசாலையில் ஏற்கனவே ஆரம்ப பிரிவு ஆசிரியர்கள் இருவர் தொற்றுக்குள்ளான நிலையில் அப் பாடசாலையைச் சேர்ந்த மேலும் சில ஆசிரியர்களுக்கு அன்டிஜன் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது.

அதில், ஆரம்ப பிரிவு ஆசிரியர்கள் இருவருக்கு கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டது. தொற்றுக்கு உள்ளானவர்களை தனிமைப்படுத்துவதற்கும், அவர்களுடன் தொடர்புடையவர்களை இனங்காணப்பதற்கும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (4-5-250)

# குருப்பெயர்ச்சிப் பலன்கள்

## 14.11.2021-12.11.2022



**சந்தர்ப்பம் வரும்போது சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று சொல்லும் கும்ப இராசி வாசகர்களே!**

இதுவரை உங்கள் இராசிக்கு 12 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த குரு பகவான் 13.11.2021 அன்று உங்கள் இராசியிலேயே சஞ்சரிக்கப் போகின்றார். தன லாபாதிபதியான குரு பகவான் இராசியில் சஞ்சரிக்கும் பொழுது பொருளாதாரத்தில் நிறைவு ஏற்பட்டாலும் மனநிம்மதி குறைவாகவே இருக்கும். கார

தும் முடிவடையாத காரியங்கள் இப்பொழுது முடிவடையும். உறவினர்களோடு இருந்த கருத்து வேறுபாடு அகலும். புத்திர ஸ்தானமாகவும் 5 ஆம் இடம் கருதப்படுவதால் பிள்ளைகள் வழியில் நல்ல தகவல் வரலாம்.

அவர்களின் எதிர்கால நலன் கருதிப் புதிய திட்டங்களைத் தீட்டுவீர்கள். கல்யாணம் போன்ற சுப காரியங்கள் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தென்படும்.

குருவின் பார்வை 7 ஆம் இடத்தில் பதிவதால் களத்திர ஸ்தானம் புனிதமடைகின்றது. எனவே இதுவரை பேசிப் பேசி விட்டுப்போன வரன்கள் இப்பொழுது முடிவாகலாம். மங்கல ஓசை மனையில் கேட்பதற்கான வழி பிறக்கும்.

குருவின் பார்வை 9 ஆம் இடத்தில் பதிவதால் பாக்கிய ஸ்தானம் பலம் பெறுகின்றது. எனவே கூட்டு முயற்சியில் இருந்து விலகி தனித்து இயங்கலாமா? என்று சிந்திப்பீர்கள் என்றைக்கோ வாங்கிப் போட்ட இடம்

சஞ்சரிக்கின்றார். அவர் சஞ்சரிக்கும் வீடு சுக்கிரனது வீடாகும். எனவே பெண்வழிப் பிரச்சினைகள் அகலும்.

புதிய இல்லம் கட்டிக் குடியேற வேண்டும் என்ற எண்ணம் நிறை




வேறும். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. அடகு வைத்த நகைகளை மீட்டுக் கொண்டு வரும் சூழ்நிலை உருவாகும்.

**சுய சாரத்தில் குரு சஞ்சாரம் (2.3.2022 முதல் 13.4.2022 வரை)**

படலாம். உடல் நலத்திலும் கவனம் தேவை.

**சிறப்பு வழிபாடு**

இல்லத்துப் பூஜை அறையில் பட்டாபிஷேக ராமர் படம் வைத்து, விஷ்ணு கவசம் பாடி வழிபடுவது நல்லது. ஆலயத்தில் உள்ள அம்மன், குரு தட்சிணாமூர்த்தி ஆகியவற்றை அனுகூல நாளில் சென்று வழிபட்டு வந்தால் அனைத்து யோகங்களும் வந்து சேரும்.

**செவ்வாய் - சனி பார்வை மற்றும் சேர்க்கை**

13.11.2021 முதல் 6.12.2021 வரை செவ்வாய்-சனி பார்வைக் காலம்,

26.2.2022 முதல் 6.4.2022 வரை மகரத்தில் செவ்வாய்-சனி சேர்க்கைக் காலம்,

இக்காலத்தில் மிக மிக கவனத்

## ஜென்மத்தில் வந்தது குரு பகவான்; சிந்தித்து செயற்பட்டால் வெற்றியுண்டு!

### ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்

ணம், 'ஜென்ம குரு, ஜென்ம ராமர் வனத்திலே' என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கின்றது. அதாவது, 'இராமபிரான் வனவாசம் சென்ற பொழுது அவருக்கு ஜென்மத்திற்கு குரு வந்தது' என்று சொல்வார்கள். அதற்காக நீங்கள் பயப்பட வேண்டியதில்லை.

உங்களைப் பொறுத்த வரை தொழிலில எந்தப்பாதிப்பும் ஏற்படாது. ஆனால் வரவைக் காட்டிலும் செலவு கூடுதலாக இருக்கும். மருத்துவச் செலவுகளும் மனநிம்மதிக் குறைவும் உருவாகலாம். எனவே எதைச் செய்தாலும் ஒரு முறைக்குப் பலமுறை யோசித்துச் செய்வது நல்லது.

**குருவின் பார்வை பலன்**

இந்தக் குருப்பெயர்ச்சியின் விளைவாக குரு பகவான் உங்கள் இராசிக்கு 5, 7, 9 ஆகிய மூன்று இடங்களையும் பார்க்கப் போகின்றார். எனவே அந்த மூன்று இடங்களும் புனிதமடைகின்றன. அவற்றிற்குரிய ஆதிபத்யங்கள் மிகச் சிறப்பாக நடைபெறும். குறிப்பாக 5 ஆம் இடத்தை குரு பார்ப்பதால் பூர்வ புண்ணிய ஸ்தானம் பலம் பெறுகின்றது.

எனவே இதுவரை முயற்சி செய்

இன்றைக்கு பலமடங்கு விலை உயர்ந்து மகிழ்ச்சியைத் தரும்.

**நட்சத்திர பாதசாரப்படி பலன்கள்**

**செவ்வாய் சாரத்தில் குரு சஞ்சாரம் (13.11.2021 முதல் 12.12.2021 வரை)**

உங்கள் இராசிக்கு 3, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். எனவே தொழில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும். துணிவும், தன்னம்பிக்கையும் கூடும். வாடகைக் கட்டிடத்தில் நடைபெற்ற தொழிலை சொந்தக் கட்டிடத்திற்கு மாற்றும் முயற்சி வெற்றி தரும்.

**ராகு சாரத்தில் குரு சஞ்சாரம் (13.12.2021 முதல் 1.3.2022 வரை)**

உங்கள் இராசிக்கு 4 ஆம் இடத்தில் சுக ஸ்தானத்தில் ராகு பகவான்

குரு உங்கள் இராசிக்கு 2, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியாவதால் தனது சுய சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது நன்மைகளைச் செய்யும். குடும்ப முன்னேற்றம் கூடுதலாக இருக்கும். கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும். கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றுவீர்கள்.

**ராகு-கேது பெயர்ச்சிக் காலம்**

குருப்பெயர்ச்சி காலத்தில் 21.3.2022 இல் ராகு-கேது பெயர்ச்சி நிகழவிருக்கின்றது. இதுவரை உங்கள் இராசிக்கு 4 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த ராகு பகவான் இப்பொழுது 3 ஆம் இடத்தில் சஞ்சரிக்கப் போகின்றார்.

அதே நேரத்தில் 10 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த கேதுபகவான் 9 ஆம் இடத்திற்கு மாறப்போகின்றார்.

இதன் விளைவாக உடன் பிறப்புகளோடு கருத்து வேறுபாடுகள் ஏற்

தோடு செயற்பட வேண்டிய நேரமாகும். முரண்பாடான கிரகங்களின் பார்வையும், சேர்க்கையும் இருக்கும் பொழுது உடல் ஆரோக்கியத் தொல்லைகள் ஏற்படும். உறவினர் பகை அதிகரிக்கும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்காது.

உத்தியோகத்திலிருந்து ஒரு சிலரைப் பணிநீக்கம் செய்யும் சூழ்நிலை கூட உருவாகலாம்.

கொடுக்கல்-வாங்கல்களில் ஏமாற்றங்களைச் சந்திக்க நேரிடும். எதைச் செய்தாலும் ஒரு முறைக்குப் பலமுறை யோசித்துச் செய்ய வேண்டிய நேரமிது.

**பெண்களுக்கான பலன்கள்**

கும்ப இராசியில் பிறந்த பெண்களுக்குப் பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்பட விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. ஏழரைச் சனி நடைபெறுவதால் எதிலும் கவனம் தேவை.

பிள்ளைகளுக்கான சுபகாரியங்கள் நடைபெறும். பணிபுரியும் பெண்களுக்கு வேலைப்பளு அதிகரிக்கும். அனுமன் வழிபாடு ஆனந்தம் வழங்கும்.

(தொடரும்)

# தொற்றுக்குள்ளாகும் சிறுவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

(கொழும்பு)

கொரோனாத் தொற்றுக்குள்ளாகி வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படும் சிறுவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

பொறளை சீமாட்டி ரிஜ்வே சிறுவர் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் ஜீ.விஜேசூரிய இந்த விடயத்தினைக் குறிப்பிட்டார். இந்த நிலையைக் கட்டுப்படுத்த பெரியவர்கள் மிகவும் பொறுப்புடன் செயற்பட வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தினார். ( நி-5)

# வாகனத்தை செலுத்தும் போது அவதானத்துடன் செயற்படுங்கள்

## சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஜகத் பளிஹக்கார

(யாழ்ப்பாணம்)



**வாகனங்களைச் செலுத்தும் முன் வாகன சாரதிகளும் பயணிகளும் உரிய பாதுகாப்பு விதிமுறைகளை கடைப் பிடியுங்கள். வீதி விபத்துக்களை கணிசமாகக் குறைக்க அனைவரையும் ஒத்துழைக்குமாறு வடமாகாணத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஜகத் பளிஹக்கார வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

வடமாகாணத்தின் ஏ-9 பிரதான வீதியின் இருபுறங்களிலும் பகல், இரவு நேரங்களில் அனுமதியின்றி வாகனங்களை நிறுத்துவது தொடர்பில் நேற்று விசேட அறிவித்தல் ஒன்றை விடுக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அனுசரணையுடன் பொருத்தமான வாகனத் தரிப்பிடங்களை அடையாளம் கண்டு இது தொடர்பில் தகவல்களை வழங்குமாறு சாரதிகளிடம் கேட்டுக் கொண்டார்.

சாரதிகளுக்கு இடையூறு ஏற்படாத வகையில் சம்பந்தப்பட்ட பகுதிகளில் பலகைகள் வைக்க வேண்டுமென்றும் இப்பணியை உரிய முறையில் முன்னெடுப்பதற்கு பொலிஸ் போக்குவரத்து உத்தியோகத்தர்களை ஈடுபடுத்துமாறு அவர் பொலிஸ் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

வட மாகாணத்தில் இந்த ஆண்டு தொடக்கத்தில் இருந்து இதுவரை 134 மரணங்கள் வீதி விபத்துக்கள் மூலம் பதிவாகியுள்ளன. 23 பேர் பலத்த காயங்கள் மற்றும் 308 பேர் சிறிய காயங்களுடன் தப்பியுள்ளனர்.

ஆகவே வாகனத்தைச் செலுத்தும் போது இருக்கைப்பட்டிகளை அணிந்து சரியான பாதை வேக வரம்புகளை உறுதி செய்யுமாறும் அவர் அனைத்து சாரதிகளிடமும் வேண்டுகோள் விடுத்தார். (நி-5-18-33)

# சர்வதேச நாணய நிதியத்திற்கு செல்ல ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம்

## அமைச்சர் வாசுதேவ நாணயக்கார

(கொழும்பு)

அரசாங்கம் நாசமாகிப் போனாலும் கூட ஒருபோதும் சர்வதேச நாணய நிதியத்திற்கு சென்று மக்களை நாசமாக்க இடமளிக்க மாட்டோம் என அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

ஆகவே சர்வதேச நாணய நிதியத்திற்கு செல்வது என்பது சிறைக்கு செல்வதற்கு சமமானது எனவும் பாராளுமன்றில் அவர் தெரிவித்தார். சர்வதேச சந்தையில் விலை உயர்வு, ஏனைய பல சிக்கல்கள் விலை உயர்வு அதிகரிக்கக் காரணம்.

இதற்கான தீர்வு எதிர்க்கட்சியிடம் உள்ளதா என கேள்வியெழுப்பிய வாசுதேவ கொரோனா தொற்று இல்லையெனில் வேறு விதமாக இந்த வரவு-செலவு திட்டம் உருவாகியிருக்கும் என்றும் குறிப்பிட்டார்.

மேலும் நாட்டில் தற்போது வறுமை, வேலையின்மை அதிகரித்துள்ள நிலையில் அவற்றை கருத்தில் கொண்டே இறுக்கமான தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன என்றும் அமைச்சர் தெரிவித்தார். (நி-5)

# தனியார் துறை ஊழியர்களின் ஓய்வூதிய வயது 60 ஆக உயர்வு

## சட்ட மூலத்தில் சபாநாயகர் கைச்சாத்து

(கொழும்பு)

தனியார் துறை ஊழியர்களின் ஓய்வூதியத்திற்கான வயது வரம்பில் திருத்தம் செய்வதற்கான சட்டமூலத்தில் சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன கைச்சாத்திட்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை குறித்த சட்ட மூலத்தில் கையெழுத்திட்டார்.

நவம்பர் 11 ஆம் திகதி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டமூலத்தில் தனியார் துறை ஊழியர்களின் புதிய குறைந்தபட்ச ஓய்வு வயது 60 ஆக அறிவிக்கப்பட்டது.

அதன்படி, தற்போது 55 வயது நிரம்பியவர்கள், 57 வயது வரை பணிபுரியலாம் என்றும் 53 முதல் 54 வயது வரை உள்ளவர்கள் 58 வயது வரையும், 52 வயது நிரம்பியவர்கள் 59 வயது வரையும் பணிபுரியலாம் என்றும் சட்ட மூலத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் 52 வயதிற்கு உட்பட்டவர்கள் மற்றும் புதிதாக பணிக்கமர்த்தப்பட்டவர்கள் புதிய ஓய்வுபெறும் வயதான 60 வயது வரை பணியாற்ற முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு, 50 வயதுடைய பெண்களும் 55 வயதுடைய ஆண்களும் தங்கள் விருப்பப்படி ஓய்வுபெறலாம் என்றும் புதிய சட்டமூலத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)

# இன்று ஒரு தகவல்

## உதவி கேட்பதால் வரும் உபத்திரவங்கள்

நம்மீது மிக உயர்வான எண்ணத்தைக் கொண்டிருப்பவர்களிடம் நாம் ஒரு உதவி கேட்டுச் செல்வோமானால் நம்மீது அவர்களுக்கு இருந்த மதிப்பு திடீரென்று இறங்கி விடுகிறது.

ஒருவருக்கு நாம் எந்தவிதத்திலும் உதவியிராத அல்லது அவர்களது அன்பைப் பெற்றிராத நிலையில் நாம் வேண்டாதவர்களாகவும் கடன்காரர்கள் போலவும் தோற்றமளிப்போம். அவர்கள் பார்வையும் இளக்காரமாய் இருக்கும்.

நூற்றுக்கு தொண்ணூற்றொன்பது மனிதர்களுக்கு விரும்பி வலிய வந்து உதவும் மனப்பான்மை இருப்பதில்லை என்று உறுதியாக நீங்கள் நம்பலாம். இந்த தொண்ணூற்றொன்பது நபர்களுள் மிகச் சிலர் உங்கள் கட்டாயத்தின் பேரில் வேண்டாவெறுப்பாக உதவ முன்வருகிறார்கள். அவர்களுக்கு ஏற்படும் இத்தகைய மனப்பான்மையால் கசப்புணர்ச்சியும் வேதனையும் தான் மிஞ்சுகின்றன.

மற்றவர்களை அப்படி இக்கட்டான சூழ்நிலைக்கு ஆளாக்கி கசக்கி பிழிந்து உதவி பெற வேண்டும் என்கிற கட்டாயம் தான் என்ன?

பிறர் உதவியின்றி இந்தக் காலத்தில் காலந்தள்ள முடியாதே என்று இந்த இடத்தில் சிந்திக்கத் தோன்றும். இந்த உண்மையை நான் மறுக்கவில்லை.

ஆனால் நாம் மற்றவர்களிடமிருந்து பெறக்கூடிய உதவி நம்மால் நிச்சயமாகச் செய்து முடிக்க இயலாததாகவும் அவசியமானதாகவும் தவிர்க்க முடியாததாகவும் உரியவர்களை இக்கட்டான சூழ்நிலைக்கு ஆளாக்காததாகவும் அவர்கள் மனமுவந்து செய்வதாகவும் இருக்க வேண்டும்.

ஒருவர் நாம் கேட்கும் சிறு உதவியைச் செய்து கொடுத்து விடுகிறார் என்றே வைத்துக் கொள்வோம். மறுநாள் அவர் மிகப்பெரிய உதவி ஒன்றைச் செய்து கொடுக்கும்படி கேட்டு வருகிறார். உதவக்கூடிய மனப்பான்மை உங்களுக்கு இருந்தும் அதை முடித்துக் கொடுக்கச் சூழ்நிலை இடந்தரவில்லை என்றால் நிச்சயமாக விரும்பத்தகாதவையே நிகழும்.

நம்மிடம் மதிப்பும் அன்பும் பிரியமும் பற்றும் பாசமும் நேசமும் நல்லுறவும் வைத்திருப்பவர்களை நாம் அதே இடத்தில் வைத்திருக்கப் பாடுபட வேண்டும்.

அவர்கள் வலிய வந்து பொன்முட்டை இடும் வாத்துக்கள்.

அத்தகையவர்களை உதவி (Obligation) என்னும் சக்தியைக் கொண்டு ஒரேயடியாய் அறுத்து விடுவதைவிட தவறான செயல் வேறு ஒன்றும் இருக்க முடியாது.

**லேனா தமிழ்வாணன்**




# புள்ளிமான்



"எனக்கா, ஆபத்தா? யாரிடமிருந்து? என்னை மிஞ்சியவன் இந்த காட்டிலிருக்கிறானா?" என்று அலட்சியமாகச் சிரித்தது சிறுத்தை.

"சரி, அப்படியானால் நான் வருகிறேன்"" என்று கூறிவிட்டு நடக்க ஆரம்பித்தது நரி.

"நில்... சொல்ல வந்த விடயத்தைச் சொல்லி விட்டுப் போ!" என்று கூறியது சிறுத்தை.

"புள்ளி மானைத் தேடி அதன் உறவுக்காரப் புள்ளிமான் ஒன்று நேற்று இங்கே வந்திருக்கிறது. வரும் போது மரங்கொத்திப் பறவை ஒன்றிடம் புள்ளிமானின் விலாசத்தைத் தந்து விசாரித்திருக்கிறது. அதுவும் விலாசத்தைச் சொல்லி விட்டுச் சென்றிருக்கிறது.

ஆனால், அது வரும் வழியிலே, நீ அதை மடக்கிக் கொன்று தின்று விட்டாய். ஆகையினால் புள்ளிமான்கள் உன் மேல் கோபமாக உள்ளன. அவை உன்னை அழித்தே தீர வேண்டும் என்று சதியாலோசனையில் ஈடுபட்டு வருகின்றன.

நீயும் அசைவம், நானும் அசைவம் என்ற இனப் பற்றால் சொல்ல வந்தேன். நீயோ வர இருக்கும் ஆபத்தை அறியாமல் வீர வசனம் பேசிக் கொண்டிருக்கிறாய். எனக்கென்ன சொல்லுவதைச் சொல்லி விட்டேன். இனி அடுத்துச் செய்யவேண்டியபொறுப்பு உன்னுடையது!" என்றது நரி.

சிறுத்தை திடுக்கிட்டுப் போனது... "இவ்வளவு விபரத்தைச் சொன்ன நீ அவை எங்கே சதியாலோசனை நடத்துகின்றன என்பதையும் சொல்லேன்"" என்று கெஞ்சும் குரலில் கேட்டது.

நரி சிந்தனை செய்தது. "சரி என்னுடன் வா, நான் கூட்டிட்டுப் போகிறேன். ஆனால், நான்தான் காட்டிக் கொடுத்தேன் என்று நீ சொல்லி விடக் கூடாது" என்ற நிபந்தனையுடன் அதை அழைத்துச் சென்றது.

காட்டின் நடுவில் ஒரு சின்னக் குன்றும், குகைப் பகுதியும் இருந்தன. அதன் முன்னிலையில் மைதானம் போன்ற மணல் பரப்பு இருந்தது. அந்தக் குகையின் வெளிப்பக்கம் பார்த்தவாறு புள்ளிமானும், புள்ளி மான் குடும்பமும் பேசிக் கொண்டிருந்தன.

போதாதற்குச் சிறு முயலும், அதன் குடும்பமும் இருந்தன. குகை முழுக்க மிருகங்கள் இருப்பது போன்ற சூழ்நிலை காணப்பட்டது.

நரி ஒரு ஓரத்தில் மறைந்து நின்று அக்காட்சியைக் காட்டியது. சிறுத்தைக்கு நாவில் நீர் ஊறியது.

"ஆஹா ஒரே நேரத்தில் எத்தனை மிருகங்கள். அத்தனையையும் அடித்துக் கொன்று விடுவேன். அத்துடன் ஒரு மாதத்துக்குச் சாப்பாட்டுக்குக் கவலையில்லை!" என்று நினைத்து, சிறுத்தை பதுங்கிப் பதுங்கிச்சென்று மணல் பகுதிக்குள் நுழைந்தது. அது மணல் பகுதியில் பூனை போலத் துள்ளிக் குதித்ததுதான் தாமதம், மணல் நறநறவென விலக ஆரம்பித்தது.

சிறுத்தை அடி எடுத்து வைப்பதற்குள் அதன் இரண்டு கால்கள் மணலில் புதைந்தன. அது ஆபத்தான புதை மணல் நிறைந்த பகுதி என்பது தெரியாமல் அதற்குள் சென்று மாட்டிக்கொண்டது சிறுத்தை. அதிலிருந்து விடுபட பலமாகக் கால்களை உதறியது.

ம்ஹூம்மெல்ல மெல்ல சிறுத்தை உள்ளே சென்று மணலுக்குள் மூழ்கிப் போயிற்று. அதைக் கவனித்துக் கொண்டிருந்த விலங்குகள் வெற்றிக் கூச்சலிட்டன. பின் நரி காட்டிய வேறு வழியின் மூலமாக தங்கள் தங்கள் இருப்பிடத்தை அடைந்து ஆனந்தமாக இருந்தன.

(முற்றும்)

# மகாபாரதம்

248



"இருந்த இடத்தில் இருந்த படியே உணவைப் பெரும் வகையில் என் கழுத்து நீண்டதாக இருக்க வேண்டும். அந்த நீளமான கழுத்தோடு நான் காட்டில் உலா வர வேண்டும்" என்று கேட்டது.

அவ்வாறே பிரம்ம தேவர் வரமளித்தார். அந்த வரத்தைப் பெற்ற பின் ஒட்டகம் உணவிற்காக அதிகம் முயற்சிக்கவில்லை.

நீண்ட கழுத்துடன் எங்கும்திரிந்தது. உணவு எளிதாகக் கிடைத்தது. இதனால் சோம்பல் உற்றது ஒட்டகம்.

ஒருநாள் ஒட்டகம் அப்படி உலவிக் கொண்டிருந்த போது பெருங்காற்று வீசியது.மழை பெய்தது. அறிவற்ற அந்த ஒட்டகம் தன் தலையை ஒரு குகையில் நீட்டிக் கொண்டிருந்தது.

அந்த நேரத்தில் மழைக்குப் பயந்து தன் மனைவியுடன் ஒரு நரி அந்தக் குகைக்குள் நுழைந்தது. குளிராலும் பசியாலும் வாடிய நரித் தம்பதியர்க்கு மிகப்பெரிய வாய்ப்பாக - உணவாக அமைந்தது, ஒட்டகத்தின் கழுத்து.

ஒட்டகத்தின் இருபுறமும் இருந்து கொண்டு நரிகள் ஒட்டகத்தின் கழுத்தைக்கடித்து வேண்டிய அளவு மாமிசத்தைப் புசித்தன.

தனக்கு நேர்ந்த ஆபத்தை உணர்ந்த ஒட்டகம் தனது கழுத்தை சுருக்க முயற்சித்தது. நீண்ட கழுத்தைச் சுருக்க அரும்பாடு பட்டது.அதற்குள் நரிகள் ஒட்டகத்தின் கழுத்துப் பகுதி முழுதும் சாப்பிட்டு விட்டன.ஒட்டகம் மாண்டு போயிற்று. சோம்பல் உள்ளவன் வரபலம் பெற்றும் பயனில்லை என்று கூறினார் பீஷ்மர்.

### நாணலும் கடலும் கதை

பலம் வாய்ந்த பகைவனிடம் பணிவாக நடந்து கொள்ள வேண்டும் என்பதை உணர்த்தும் நாணலும் கடலும் பற்றிய கதையைப் பீஷ்மர் கூறுகிறார்.

தருமரே! ஒரு சமயம் அசுரர்களின் இருப்பிடமும் நதிகளின் புகலிடமுமான கடலுக்கு ஒரு ஐயம் வந்தது.அது ஆறுகளை நோக்கி "நதிகளே உங்கள் வேகமான பிரவாகத்தின் போது பலம் மிக்க வேர்களை வேரோடும், மரங்களை கிளையோடும் கொண்டு வருகிறீர்கள்.

ஆனால்நாணலை மட்டும் ஏன்நீங்கள்கொண்டு வருவதில்லை? அது அற்பத்தனமான புல்தானே என்ற அலட்சியத்தால், அந்த நாணலை விட்டு விடுவீர்களா? உங்கள் கருத்தை அறிய விரும்புகிறேன்" என்றது. அதற்கு கங்கை ஆறு பதில் அளித்தது.

"இந்த மரங்கள் எல்லாம் கொஞ்சமும் பணிவின்றி நிமிர்ந்து நிற்கின்றன.வேகமாக வரும் எங்களைச் சிறிதும் மதிப்பதில்லை. பணிவுடன்வணங்குவதில்லை. அதனால் பலனை அனுபவிக்கின்றன.

தம் இடத்தை விட்டுப் பெயர்ந்து தலைகுப்புற எங்கள் பிரவாகத்தில் வீழ்ந்து, அடித்து வரப்பட்டு தங்களை அடைகின்றன.ஆனால் நாணலின் கதையே வேறு. பெரியாரைப் பணிதல் என்பது அதன் தனிக்குணம். எங்களைக் கண்டு பணிந்து வணங்குகிறது. (தொடரும்)

தினமும் பிரார்த்தனையில் ஈடுபடுங்கள். அது, இந்த உலகை மன உறுதியுடன் சந்தித்து வாழ வலிமை அளிக்கும். - கானோபஸ்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கார்த்திகையின் பெருமை சொல்லவும் பெரிதே!

பன்னிரு மாதங்களிலும் கார்த்திகைத் திங்கள் மகிமை கொண்ட மாதமாகும்.

கார்த்திகை என்பது தமிழ் மாதம் என்றுணர்வது முதற்கண் முக்கியமானது.

ஆங்கிலத்தில் சுட்டப்படும் நவம்பர் மாதம் என்பது கார்த்திகை மாதத்தை அப்படியே பிரதிபலிப்பதன்று.

மாறாக, நவம்பர் 15 முதல் டிசம்பர் 15 ஈறான காலக் கணக்கை உள்ளடக்கியது கார்த்திகை மாதம் என்பது அனைவரும் அறிந்ததே.

எனினும் கார்த்திகை மாதத்தை நவம்பர் மாதம் என்று கருதுகின்ற காலவகையால், அஃது வழுவல்ல என்ற நிலைக்கு வந்துவிட்டது.

ஆயினும் பன்னிரு மாதங்களில் ஒன் றான கார்த்திகையின் பெயர் இருபத்தேழு நட்சத்திரங்களில் ஒன்றாகச் சுட்டப்படுகின்றது.

இந்தப் பெருமை சித்திரை மாதத்துக்கும் உடையதென்பதை கூறாவிடில் அஃது யாம் விட்ட குறையாகி விடும் என்பதால் அவ்விடயமும் இங்கு முன்வைக்கப்படுகிறது.

இவை ஒருபுறமிருக்க, கார்த்திகை மாதத்தில் காந்தள் எனும் மலர் மலருவதால் அது கார்த்திகைப் பூ என்று சிறப்பிக்கப்படுகின்ற அளவில் ஏனைய பதினொரு மாதங்களுக்கும் இல்லாத தனித்துவம் கார்த்திகை மாதத்துக்கு உண்டென்பது உணர்தற்குரியது.

தவிர, கார்த்திகை மாதத்து பூரணை நாள் திருக்கார்த்திகை எனப் பெருமை பெறுகிறது.

ஆம், சிவப்பரம்பொருள் ஜோதியாகத் தோன்றிக் காட்சியளித்த நாள் கார்த்திகை மாதத் துப் பூரணை என்பதால் அத்தினத்தைக் கார்த்திகைத் தீப நாளாக வழிபடுகின்றோம்.

இதன் காரணமாகவே ஆலயங்களில் சொக்கப்பனை கட்டி அதில் தீபமேற்றி எழுகின்ற நெருப்பை சிவப்பரம்பொருளின் ஜோதியாய்ப் பாவனை செய்து; முழுமுதற் கடவுளாகிய சிவப்பரம்பொருளை அருட்பெரும் ஜோதியாக வழிபட்டு, அவனின் தனிப்பெரும் கருணைக்கு ஆளாகின்ற உன்னத வழிபாடு கார்த்திகை மாதத்தில் நடைபெறுகின்றது.

இதற்குத் திருவண்ணாமலையில் ஏற்றப்படும் ஜோதி அடையாளமாய் விளங்கும்.

இவ்வாறு சிவனின் ஜோதியை வழிபடுகின்ற காலமாக கார்த்திகை மாதம் விளங்குவதால்,

திருக்கார்த்திகை என்று உயர்வு பெற்று **திரு** எனும் மேலான அடைமொழியை தன்னுள் ஏந்திக் கொண்டது.

இதற்கு அப்பால், எங்கள் உயிரினும் மேலான உறவுகள் ஈந்த தியாகத்தின் உன்னதம் போற்றப்படுகின்ற மாதமும் கார்த்திகை என்பதால், நம் தமிழர் வாழ்வியலில் கார்த்திகை மாதம் பெறும் பெருமை சொல்லவும் பெரிதே.

## 36 ஆயிரம் மெற்றிக் தொன் பெற்றோல் இன்று நாட்டுக்கு வருகின்றது

(கொழும்பு)

36 ஆயிரம் மெற்றிக் தொன் பெற்றோல் இன்று நாட்டுக்கு வந்து சேரும் என எதிர் பார்ப்பதாக இலங்கை பெற்றோலிய களஞ்சியசாலையின் தலைவர் மொஹமட் உவைஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் 40 ஆயிரம் மெற்றிக் தொன் டீசல் தற்போது முத்துராஜவெல களஞ்சியத்தில் இறக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 19 ஆம் திகதி மேலும் 40 ஆயிரம் மெற்றிக் தொன் டீசல் கொண்டுவரப்படவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

நாட்டில் போதிய எரிபொருள் இருப்பதால் மக்கள் தேவையில்லாமல் அஞ்ச வேண்டியதில்லை. அத்துடன், வரிசையில் நின்று அதிக பெற்றோலை வாங்கி இருப்பு வைத்து செயற்கைத் தட்டுப்பாட்டை ஏற்படுத்த வேண்டாம் எனவும் இலங்கை பெற்றோலிய களஞ்சிய சாலையின் தலைவர் தெரிவித்துள்ளார். (ம)

## பளை பொலிஸ் நிலையத்தில் 11 பேருக்கு கோவிட் தொற்று

(முறிகண்டி)

கிளிநொச்சி மாவட்டம் பளை பொலிஸ் நிலையத்தில் பொலிஸார் 11 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஐந்து நாட்களில் குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக சுகாதாரத் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

இதனை அடுத்து பொலிஸாருடன் தொடர்பிலிருந்தவர்களை தனிமைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது. (ம-100)

## இலங்கையில் மேலும் 728 பேருக்கு தொற்று

(கொழும்பு)

இலங்கையில் மேலும் 728 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டிருப்பதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

இதற்கமைய, நாட்டில் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 553,772 ஆக அதிகரித்துள்ளது.

இவர்களில் 14, 304 பேர் சிகிச்சை நிலையங்களில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை, கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 448 பேர் நேற்று குணமடைந்துள்ளனர். (ம)

## வவுனியா தாதியர் கல்லூரியில் 13 பேருக்கு கொரோனா

(வவுனியா)

வவுனியா தாதியர் கல்லூரியில் 13 பேருக்கு கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியா மாவட்டத்தில் கோவிட் தொற்று மீண்டும் அதிகரித்து வரும் நிலையில், தொற்றாளர்களுடன் தொடர்புடையவர்களுக்கு மற்றும் எழுமாறாக சில பகுதிகளில் அன்டிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அந்தவகையில், வவுனியா, தாதியர் கல்லூரியில் நேற்று முன்னெடுக்கப்பட்ட துரித அன்டிஜன் பரிசோதனையில் 13 பேருக்கு கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து தொற்றாளர்கள் சிகிச்சைக்காக தனிமைப்படுத்தப்பட்டுள்ளதுடன், அவர்களுடன் தொடர்புடையவர்களையும் தனிமைப்படுத்த சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ம-250)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**வவுனியா பிரதேசத்தில்** முகத்தான் குளம் முதலாவது பண்ணை பிரதேசத்தில் மின்சாரம் தடைப்படும்.

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2021

**"மரங்களின் பிரதான தொழிற்பாடுகள் புரிந்துகொள்ளப்பட்டு அவை உயிர்வாழ் அங்கிகளாக எம்மால் உணரப்பட்டால், அவை எமக்கு ஆதாயமும் அகமகிழ்வும் தரக்கூடிய என்றும் முடிவில்லாத வளமாக விளங்கும்."**

**-நி.தி.மிரோவ் (அமெரிக்க எழுத்தாளர்)**

## சத்திய தரிசனம்

## முதலில் உன்னைத் திருத்து




- நீருக்கு மீன் அவசியமில்லை. ஆனால், மீனுக்கு நீர் அவசியம். அதுபோல குருவுக்கு சீடன் அவசியமில்லை. ஆனால், சீடனுக்கோ குரு மிகவும் முக்கியம். குருவின் துணையில்லாவிட்டால் சீடனால் எதுவும் செய்ய முடியாது.
- முதலில் நம்மை நாம் திருத்திக் கொள்ள வேண்டும். அதன் பின் வீட்டை திருத்த வேண்டும். அதன் பிறகே, நமது ஊரை திருத்த வேண்டும். அடுத்து மாவட்டத்தையும், பின்னர் மாநிலத்தையும், அதற்கடுத்தபடியாக நாட்டையும் திருத்த முயல வேண்டும். இவ்வாறு படிப்படியாகத்தான் செயல்பட வேண்டும். அதை விட்டுவிட்டு, எடுத்த எடுப்பிலேயே சமுதாயத்தையும் நாட்டையும் திருத்த முயல்வது அர்த்தமற்றது.
- நீரும் நீரும் எளிதில் ஒன்றாக கலந்து விடும். ஆனால், நீரில் எண்ணையை விட்டால் அது கலக்காமல் பிரிந்தே நிற்கும். அதே போல் நல்லவர்கள் நல்லவர்களுடன் எளிதில் சேர்ந்து விடுவார்கள். ஆனால், கெட்டவர்கள் நல்லவர்கள் போல் நடித்து, அவர்களுடன் சேர முயற்சித்தாலும் அது முடியாமல் போய்விடும்.
- குளத்தில் நீர் இருந்தால் தவளைகள் அங்கே குவிந்திருக்கும். நீர் வற்றி விட்டால் அங்கிருந்து வெளியேறிவிடும். அதே போல் ஒருவனிடம் பதவி, பணம் இருக்கும் போது மக்கள் அவனை சூழ்ந்து இருக்கின்றனர். ஆனால், அவனுக்கு வறுமை ஏற்படும் போது, உறவினர்களும், உயிர் நண்பர்களும் விலகி விடுகின்றனர்.
- வளர்த்த பெற்றவர்களுக்கு நன்றி தெரிவிப்பது போல், படைத்த இறைவனுக்கும் தினமும் நன்றி தெரிவிக்க வேண்டும்.

# கீரிமலை சிவபூமி முதியோர் ஆச்சிரமம்

## திறப்பு விழா இன்று

### செஞ்சொற் செல்வர் கலாநிதி. ஆறு.திருமுருகனின் நீண்ட நோக்குக்கொண்ட தமிழ்ச் சைவ அறப்பணிகள்



வைதிக சைவத்தின் காவலர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமானின் இருநூறாவது நினைவு ஆண்டை அண்மிக்கும் இக்காலத் தில் இன்று (18.11.2021) கோலாகலமாக கீரிமலை சிவபூமி முதியோர் ஆச்சிரமம் திறப்பு விழா செய்யப்பெற்று முதியோர்களிடம் கையளிக்கின்ற அறம் தொடரு கின்றது.

நாவலர் பணி மரபிலே வருகி ன்ற ஒரு விடிவெள்ளியாக நம்மி டையே இக் காலத்தில் தமிழ்ச்சைவ அறப்பணிக்காவலராக திகழ்பவர் கலாநிதி. ஆறு. திருமுருகன். சொல்லாற்றலால் செஞ்சொற் செல்வர் என்று அனைவராலும் சிறப்பிக்கப்படும் சர்வதேச புகழ்பூத்த சொற் பொழிவாளர்.

உலகமெங்கும் சென்று தம் சொல்லாளுமையால். சொற்பொழிவாற்றி சைவ நற்பணியை ஆற்றிவரும் நல்லாசிரியரும் ஆவார். நல்லாசி ரியப் பணியிலும் பின் கல்லூரி முதல்வர் பணியிலும் தனக்கான முத்திரை பதித்து பணிகளை நிறை வேற்றும் நிர்வாகத் திறமையுள்ள வராகவும் செயற்படுகின்றார்.


சிவத்தமிழ்ச் செல்வியின் வழியில் பயணித்து தெல்லிநகர் துர்க்கையம்பாள் பேராலய அறங்காவலர் சபைத் தலைவராக நீண்டகாலமாக இருந்து ஆலயத்தை மற்றைய ஆலயங்களுக்கு முன்னோடியாக விளங்கச் செய்து ஆலயத்தை சமய சமூக பண்பாட்டில் முதல் நிலைப்படுத்தி வருகின்றவர்.

அகில இலங்கை இந்துமா மன்றத்தின் உபதலைவராகவும் பிராந்திய இயக்குநராகவும் செயற்படுவதோடு எண்ணற்ற பணிகளைத் தோளில் தாங்கி எம் எல்லோருடனும் பொறுப்புடன் பணியாற்றுகின்றவர்.

சரியானதை துணிந்து சொல்லும் ஆளுமை மட்டுமன்றி செயலில் பெரும் வீரராகச் செயற்பட்டு தீர்மானங்களை சரியான பாதையில் நடை முறைப்படுத்துகின்றவர்.

ஆறு. திருமுருகனின் எண்ணத்தின் வண்ணமான சிவபூமி அறக்கட்டளை நிதியம் அறக்கட்டளை சட்டத்தின் 114 ஆம் சரத்துக்கமைய கூட்டமைக்கப்பட்ட நிறுவனமாக இலங்கை அரசாங்கத்தால் வர்த்தமானியால் பிரசுரிக்கச் செய்து பல அறக்கட்டளைகளை முன்னெடுத்துச் செல்லுபவர்.

கோண்டாவில் சிவபூமி மனவிருத்திப் பாடசாலை, சுழிபுரம் சிவபூமி முதியோர் இல்லம், கீரிமலை சிவபூமி மடம், குப்பிழான் சிவபூமி ஞான ஆச்சிரமம், கீரிமலை சிவபூமி யாத்திரிகர் விடுதி, கோண்டாவில் சிவபூமி வாழ்வாதார நிதியம், கீரிமலை சிவபூமி கலைக் களஞ்சியம், கோண்டாவில் சிவபூமி மருத்துவ நிதியம், கிளிநொச்சி சிவபூமி மனவிருத்திப் பாடசாலை, இயக்கச்சி சிவபூமி கோட்டம், கோண்டாவில் சிவபூமி கல்வி நிதியம், திருகோணமலை சிவபூமி மனவிருத்திப் பாடசாலை, கோண்டாவில் சிவபூமி தொழிற் பயிற்சிப் பாடசாலை, திருகோணமலை சிவபூமி மடம், நாவற்குழி சிவபூமி திருவாசக அரண்மனை, கந்த புராண ஆச்சிரமம், ஆரம்பித்துள்ள திருக்குறள் அரண்மனை, திருமந்திர அரண்மனை என குறித்த அறக்கட்டளைப் பணிகள் தொடர்ந்த வண்ணமாக இருக்கின்றன.



இந்த அறக்கட்டளைக்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் அன்பர்கள் நிதி வழங்க, அவற்றை முறையாகப் பெற்று சரியாக திட்டமிட்டு தூரநோக்கோடு திருமுருகன் தாம் சைவப்பணிகளை திறம்பட நீண்ட நோக்குக்கொண்டு செய்து வருகின்றார்.

அத்துடன் ஈழத்து வேத பிராமண சமூகத்திலும் ஆழமான ஈடுபாடும் அக்கறையும் கொண்டவராக அவர்களின் நலன்களிலும் அதிக கரிசனை கொண்டவராக காணப்பட்டு திருமுருகன் வேத ஆகம மரபுகளிலும் அவற்றை பேணி வருகின்ற குருமார்களுக்கான இடத்தினையும் தேவைகளையும் முழுமனதுடன் செய்து, அவற்றிற்கு மதிப்பளித்து அவற்றை காத்து நின்று வேதிய மரபை பேணுவதிலும் சிரத்தை யோடு செயற்பட்டு வருபவர்.

ஈழத்தின் காசி என்று கொண்டாடப்படும் புகழ்பெற்ற நகுலேஸ்வராலயத்திற்கு அண்மையிலும் சிவபூமி முதியோர் ஆச்சிரமம் உருவாகி திறப்பு விழாக்காண்கின்ற செயல் தமிழ் சைவ உலகிற்கு பெரும் வரப்பிரசாதமாக அமைவதோடு கலாநிதி. ஆறு. திருமுருகனின் பணிகள் சிறக்க இறைவன் அருள் வேண்டுமென பிரார்த்திப்பதோடு அவர் பணியை அறிவதும் உணர்வதும் அவை இன்னும் பொலிவுடன் திகழ உதவுவதும் நம் அனைவரின் கடமையாகும்.

**கலாநிதி**
**மகேஸ்வரக் குருக்கள்**
**பாலகைலாசநாதசர்மா**
**தலைவர், சமஸ்கிருதத்துறை**
**இந்து கற்கைகள் பீடம்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

# நிதியை தந்து ஏமாற்ற வேண்டாம் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கம்

(நெளுக்குளம்)

எங்களுடைய போராட்டத்தை நீர்த்துப் போக செய்வதற்காகவே காணாமல் போனவர்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டிருப்பதாக காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்க தலைவி காசிப்பிள்ளை ஜெயவனிதா தெரிவித்தார். காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு நட்டஈடு வழங்குவதற்காக வரவு-செலவு திட்டத்தில் 300 மில்லியன் ரூபாய் அரசால் ஒதுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எந்த ஒரு தாயும் அரசாங்கம் ஒதுக்கிய இந்த நிதியை பெற்றுக்கொள்வதற்குத் தயாராக இல்லை. ஏனென்றால் நாங்கள் இந்தப் போராட்டத்தில் உண்மையான ஆதாரங்களுடன், கண்கண்ட சாட்சியங்களுடன் தான் போராடிக் கொண்டிருக்கின்றோம். எங்களுடைய பிள்ளைகளை எங்கே வைத்திருக்கிறீர்கள் என்பதனை கூற வேண்டும்.

நிதியை தந்து எங்களை ஏமாற்ற வேண்டாம். இந்த விடயத்தை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம் என மேலும் தெரிவித்தார். (நி-5-299)

# போதியளவு உடற்பயிற்சி இன்மை, உணவுப்பழக்கவழக்கங்களால் அதிகரிக்கும் நீரிழிவு நோயாளர்கள்



(கரணவாய்)

மொத்த சனத் தொகையில் 15 வீதத்திற்கும் அதிகமானோர் நீரிழிவு நோயினால் பாதிக்கப்படுவதாக வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார்.

நேற்று புதன்கிழமை பருத்தித்துறை ஆதார மருத்துவமனை சமூகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட நீரிழிவு நோய் விழிப்புணர்வு தொடர்பான சைக்கிள் ஓட்ட நிகழ்வில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தற்போது மக்களின் உணவுப் பழக்கத்தில் ஏற்பட்ட மாற்றம், உடற்பயிற்சியின்மை போன்ற காரணங்களால் அதிக அளவில் நீரிழிவு நோய் ஏற்பட்டு வருவதாகவும் அதிலிருந்த மீள்வதற்கு உடற்பயிற்சியில் ஈடுபடுவதுடன் நல்ல உணவுப் பழக்கங்களை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (நி-5-60)

# படையினருக்கான காணி சுவீகரிப்பு மாதகல் பகுதியில் தடுத்து நிறுத்தம்



(யாழ்ப்பாணம்)

யாழ். மாதகல் பகுதியில் கடற்படையினரின் தேவைக்காக தனியார் காணிகளை சுவீகரிப்பதற்காக முன்னெடுக்கப்பட இருந்த காணி அள வீட்டு பணிகள் மக்களின் எதிர்ப்பால் கைவிடப்பட்டது.

மாதகல் ஜே/150 கிராம உத்தியோகத்தர் பிரிவில் தனியார் காணிகளில் நிலை கொண்டுள்ள கடற்படையினர் அக்காணிகளை சுவீகரிப்பதற்கான அளவீட்டை மேற்கொள்வதற்காக நேற்று புதன்கிழமை நில அளவை திணைக்கள உத்தியோகத்தர்களுடன் வருகை தந்த போது, காணி உரிமையாளர்கள், அப்பகுதி மக்கள் மற்றும் அரசியல் பிரமுகர்கள் கடும் எதிர்ப்பினை தெரிவித்ததை அடுத்து, காணி அளவீட்டுப் பணிக்கு வந்தவர்கள் திரும்பி சென்றனர். (4-5-33-18-104)

## 23 பேர்...

உயிரிழந்துள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், நாட்டில் கொரோனா தொற்று காரணமாக உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 14.057 ஆக உயர்வடைந்துள்ளது. (ம)

## 10 மாணவர்கள்...

சாலை மாணவர்கள் 10 பேர் உட்பட மொத்தம் 46 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அக்கராயன்குளம், புதுமுறிப்பு, விவேகானந்தா நகர், ஆனந்த நகர், செல்வபுரம், பொன்நகர், வட்டக்கச்சி மற்றும் முழங்காவில் ஆகிய பிரதேசங்களிலுள்ள பாடசாலை மாணவர்களுக்கே கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என கிளிநொச்சி மாவட்ட தொற்று நோயியல் வைத்தியர் நிமால் அருமைநாதன் தெரிவித்துள்ளார். (ம)

## இளம் குடும்பஸ்...

வயதுடைய இளம் குடும்பஸ்தர் ஒருவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான முத்தையா கேதீஸ்வரன் என்னும் இளம் குடும்பஸ்தரே இவ்வாறு வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இவர் குடும்பத் தகராறு காரணமாக குடும்பத்தில் இருந்து நீண்ட காலமாக பிரிந்து வாழ்வதாகவும் அவரது மனைவி வழங்கிய வாக்குமூலத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-15,316)

### ஜாதிக சம்பத

| | |
|---|---|
| சீட்டிழுப்பு திகதி | 17/11/2021 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1166 |

வெற்றி இலக்கங்கள்: மிதுனம் 9 2 6 3 0 3

தேசிய லொத்தர் சபை

### மெகா பவர்

| | |
|---|---|
| திகதி | 17/11/2021 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0937 |

வெற்றி எழுத்து: P — வெற்றி இலக்கங்கள்: 07 08 13 54 70

### மஹஜன சம்பத

| | |
|---|---|
| திகதி | 2021/11/17 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4589 |

ஆங்கில எழுத்து: D — வெற்றிப்பெற்ற இலக்கங்கள்: 4 5 6 9 3 6

தேசிய லொத்தர் சபை

### கொவிசெத — உத்தியோகபூர்வ முடிவுகள்

| | |
|---|---|
| சீட்டிழுப்பு திகதி | 17.11.2021 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2884 |

ஆங்கில எழுத்து: B — வெற்றி இலக்கங்கள்: 17 19 46 74

தேசிய லொத்தர் சபை

### தன நிதானய

திகதி - 2021.11.17 — சீட்டிழுப்பு இலக்கம் - 619

ஆங்கில எழுத்து: S — வெற்றி இலக்கங்கள்: 01 22 35 55

## "நந்தி ஒழிக"...

எதிர்க்கட்சியினரின் நேற்றைய பாராளுமன்ற ஆர்ப்பாட்டத்தில் "நந்தி ஒழிக, நீதி வாழ்க" என எழுதப்பட்ட பதாதைகள் காட்சிப்படுத்தப்பட்டமை தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி.க்கள் விளக்கமளித்துள்ளனர்.

கொழும்பில் செவ்வாய்க்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மக்கள் பேரணிக்கு பொலிஸாரினால் ஏற்படுத்தப்பட்ட இடையூறுகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் பாராளுமன்றத்தில் நேற்று புதன் கிழமை ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சபைக்குள் ஆர்ப்பாட்டமொன்றை நடத்தினர்.

இதன்போது ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி.க்களினால் "நந்தி ஒழிக, நீதி வாழ்க" உள்ளிட்ட சிங்கள,ஆங்கில,தமிழ் மொழிகளில் எழுதப்பட்ட வாசகங்கள் கொண்ட பதாதைகளை ஏந்தி ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது.

எனினும் இதனை மறுத்துள்ள ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி.க்கள், "நந்தி மாதிரி குறுக்கே வராதே" என்பது கிராமங்களில் கூறப்படும் ஒரு வழக்காடு சொல்.

மக்கள் சார்ந்து நாம் முன்னெடுக்கும் போராட்டங்கள், நடவடிக்கைகளின்போதெல்லாம் அரசாங்கமும் பொலிஸாரும் குறுக்கீடுகளை ஏற்படுத்துகின்றனர். நாம் செவ்வாய்க்கிழமை கொழும்பில் நடத்திய மக்கள் சக்தி போராட்டத்தின் போதும் பொலிஸார் குறுக்கீடுகளைச் செய்தனர்.

ஆகவே அரசாங்கத்தினதும் பொலிஸாரினதும் இவ்வாறான குறுக்கீடுகளை கண்டிக்கும் வகையிலேயே கிராமத்து வழக்காடு சொல்லான "நந்தி மாதிரி குறுக்கே வராதே" என சொல்லை உதாரணமாக கொண்டு அரசாங்கம் எமது போராட்டங்களுக்கு குறுக்கே வரக்கூடாது என்பதனை வலியுறுத்தி "நந்தி ஒழிக நீதி வாழ்க" என்ற பதாதையை பயன்படுத்தினோமே தவிர இந்து மதத்தை இழிவு படுத்தும் நோக்கம் எமக்கோ கட்சிக்கோ சிறிதளவும் கிடையாது என்றனர். (ம)

## வடக்கில்...

மீற்றருக்கு அதிகமாக மழை பெய்ய சாத்தியம் உள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மத்திய வங்கக் கடலில் நிலை கொண்டுள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி மேற்கு நோக்கி நகர்ந்து தெற்கு ஆந்திரா மற்றும் அதையொட்டிய வட தமிழக கடற்கரையை இன்று அடைய வாய்ப்புள்ளது.

இதனால் வடபகுதியில் மழைக்கான சாத்தியம் காணப்படுகின்றது என வானிலை ஆய்வு மையம் நேற்று வெளியிட்டுள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## தொற்றாளர்கள்...

நாட்டில்கொரோனாத்தொற்றுக்குள்ளாகி வரும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ள நிலையில் எதிர்காலத்தில் நாட்டில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது. இந்நிலை தொடர்ந்தால் மீண்டும் போக்குவரத்துக் கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டிய நிலை ஏற்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ம)

## மாவீரர்...

தாக்கல் செய்யப்பட்டது.

இதனடிப்படையில் கரைதுறைப்பற்று பிரதேச சபை தவிசாளர் கமலநாதன் விஜிந்தன், கரைதுறைப்பற்று பிரதேச சபை உப தவிசாளர் திருச்செல்வம் இரவீந்திரன், கரைதுறைப்பற்று பிரதேச சபை முன்னாள் தவிசாளர் கனகையா தவராசா, கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர்களான சின்னராசா லோகேஸ்வரன், இரத்தினம் ஜெகதீஸ்வரன், தவராசா அமலன், சமூக செயற்பாட்டாளர்களான சுமித்கட்சன் சந்திரலீலா, காளிமுத்து சண்முகலிங்கம், இராசசேகரம் இராசம்மா, பகீரதன் ஜெகதீசன், ஞானதாஸ் யூட்பிரசாத் ஆகிய பதினொரு பேர் மற்றும் இவர்களது குழுவினர்களுக்கே இந்த தடையுத்தரவு பெறப்பட்டுள்ளது.

மேலும் ஒட்டுசுட்டான் பொலிஸாரால் மாவீரர் நாள் நிகழ்வுகளை மேற்கொள்ள 03 பேருக்கு நீதிமன்றால் தடையுத்தரவு பெறப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர் இராமலிங்கம் சத்தியசீலன், சமூக செயற்பாட்டாளர்களான தர்மலிங்கம் ஜீவரத்தினம், தம்பையா யோகேஸ்வரன் (முல்லை ஈசன்) உள்ளிட்ட மூன்று பேர் மற்றும் இவர்களது குழுவினர்களுக்கே இந்த தடையுத்தரவு பெறப்பட்டுள்ளது. (ம-250,281)

## நாட்டில் பொருட்...

தயக்கமாக இருந்தாலும் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படும் என இணை அமைச்சரவைப் பேச்சாளரும் எரிசக்தி அமைச்சருமான உதய கம்மன்பில தெரிவித்துள்ளார். நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அந்நியச் செலாவணி நெருக்கடிக்கு நீண்டகால தீர்வுகளை அரசாங்கம் மேற்கொண்டுவருவதாகவும் குறுகிய கால வெளிநாட்டுக் கடன்களைப் பெற்று நிலைமையைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

ஏற்றுமதி வருமானத்தை விட இறக்குமதி செலவீனம் அதிகமாக இருப்பதால் எரிவாயு உள்ளிட்ட சில பொருட்களுக்கு தற்போது தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக தெரிவித்த அமைச்சர், சுற்றுலா மற்றும் புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் வருமானம் குறைந்து வருவதால் இறக்குமதி மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்தார். (ம)

## இந்து...

பில் இந்து மத பீடம் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இந்துமத மக்களின் மனதை இவ்விடயம் பெரிதும் புண்படுத்துவதாக உள்ளது. சிவாலயங்களில் நந்தீஸ்வரர் வழிபாடு சிவ பக்தர்களால் போற்றி வணங்கப்படுகின்றது.

அப்படிப்பட்ட சூழ்நிலையில் "நந்தி ஒழிக" என்ற பதாதை இந்து மக்களிடையே பெரும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது:

எனவே இப்பதாதையை தாங்கியதற்கு உடனடியாக சம்பந்தப்பட்ட தரப்பினர் இந்து மக்களிடம் மன்னிப்புக் கோர வேண்டும் என சர்வதேச பீடம் சார்பாக சிவாச்சாரியார்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ம)

# கொரோனாவை விட வாழ்க்கைச் சுமையினால் மக்கள் பாதிப்பு
## திஸ்ஸ விதாரண

(கொழும்பு)

இன்று நாட்டு மக்கள் கொரோனா அச்சுறுத்தலை விட வாழ்க்கைச் சுமையினால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர் என பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

அந்த சுமையிலிருந்து மக்களை விடுவிக்க லங்கா சமசமாஜ கட்சி அரசாங்கத்திடம் வரவு - செலவுத் திட்ட யோசனையை சமர்ப்பித்துள்ளபோதிலும் அது எதுவும் வரவு - செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை என திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார். (ம)

### அத கோடிபதி (ADA KOTIPATHI)

| | |
|---|---|
| கிழமை | புதன்கிழமை |
| சீட்டிழுப்பு இல | 1392 |
| வர்ணம் | இளஞ்சிவப்பு |
| சீட்டிழுப்பு திகதி | 17.11.2021 |

இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 5,150,040

வெற்றி இலக்கங்கள்: 37 41 51 61 — ஆங்கில எழுத்து: E

### சனிதா

| | |
|---|---|
| கிழமை | புதன்கிழமை |
| சீட்டிழுப்பு இல | 3727 |
| வர்ணம் | ஊதா |
| சீட்டிழுப்பு திகதி | 17.11.2021 |

இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 4,590,720

வெற்றி இலக்கங்கள்: 16 17 48 51 — ஆங்கில எழுத்து: T

### SUPER BALL

| | |
|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 1566 |
| சீட்டிழுப்புத் திகதி | 17.11.2021 |
| நிறம் | செம்மஞ்சள் |
| தினம் | புதன் |

வெற்றி இலக்கங்கள்: T 38 50 54 62

அடுத்த சுப்பர் ஜக்பொட்: ரூ. 70,547,388/=

### ஜயோதா (Jayoda)

| | |
|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 1786 |
| சீட்டிழுப்பு திகதி | 17.11.2021 |

வெற்றி இலக்கங்கள்: 21 36 61 69 — ஆங்கில எழுத்து: D

எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 28,020,560/-

தொ. பே.: 0112 333 546/47 — Web: www.dlb.lk

### ராசி

| | |
|---|---|
| திகதி | 17.11.2021 |
| வெற்றி வாரம் | 3278 |
| வர்ணம் | பச்சை |

சுப்பர் ஜக்பொட் ரூ. 2,351,693/=

வெற்றி இலக்கங்கள்: 05 13 58 59 — மகரம்

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 8,545,580/=

### சசிரி

| | |
|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 102 |
| சீட்டிழுப்பு திகதி | 17.11.2021 |
| | புதன்கிழமை |

வெற்றி இலக்கங்கள்: 15 29 35

வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,384,100/-

# அடுத்த மாதம் இலங்கை இருளில் மூழ்கும் அபாயம்

## முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுனில்

(கொழும்பு)

இலங்கை அடுத்த மாதம் முதல் இருளில் மூழ்கப் போவதாக மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் டிசம்பர் மாதம் 5ஆம் திகதி இலங்கைக்கு எரிபொருள் கப்பல் ஒன்று வரவுள்ளதாக உறுதியளித்தபோதிலும், அதற்கு செலுத்துவதற்கு போதிய டொலர்கள் இல்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பழுது நடவடிக்கை காரணமாக சப்புகஸ்கந்த சுத்திகரிப்பு நிலையம் மூடப்படவில்லை. கச்சா எண்ணெய்க்கு செலுத்த வேண்டிய டொலர்கள் இல்லாத காரணத்தினால்தான் மூடப்பட்டுள்ளது.

சப்புகஸ்கந்த மூடப்பட்டுள்ள நிலையில், விமான நிலையத்திற்கான எரிபொருள் நிறுத்தப்பட்டு ஸ்ரீலங்கன் விமான சேவையும் நிறுத்தப்படும்.

மேலும் டிசம்பர் மாதம் இறுதியில் நுரைச்சோலை அனல்மின் நிலையத்தில் நிலக்கரி தீர்ந்துவிடும். அன்றிலிருந்து நாட்டு மக்கள் இருளில் இருக்க வேண்டிய நிலை ஏற்படும்என அவர்தெரிவித்துள்ளார். (ம)


**காணி விற்பனைக்கு**

பலாலி றோட், ஊரெழு, மனோன்மணி அம்மன் கோவிலுக்கு 100 மீற்றர் அருகாமையில் 3 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

1 1/2 பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும்.

தொடர்பு (8662)

077 658 5999
077 505 8561



**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532



**வரவு செலவுத் திட்டம் 2022**
**வலிகாமம் தெற்கு பிரதேச சபை**

1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 168ஆம் பிரிவிற்கிணங்க வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் 2022ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டு 2021.11.18ஆம் திகதி தொடக்கம் 2021.11.26ஆம் திகதி வரை பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது. இதனை அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகம், சுன்னாகம், உடுவில், ஏழாலை உப அலுவலகங்களிலும் சுன்னாகம், உடுவில், ஏழாலை பொதுநூலகங்களிலும் பார்வையிடலாம் என்பதனை அறியத்தருகிறேன்.

**க.தர்ஷன்**
**தவிசாளர்**
**வலிகாமம் தெற்கு பிரதேச சபை,**
**சுன்னாகம்.**

(C-3039)



**சேவை நலன் பாராட்டும் பிறந்தநாள் வாழ்த்துக்களும்**



29 வருடம் காவலாளியாக கடமையாற்றி இன்றுடன் ஓய்வுபெற்றுச் செல்லும்

திரு.
**சுப்பிரமணியம் இராசலிங்கம்**

அவர்களின் சேவையினைப் பாராட்டுவதோடு நீண்ட ஆயுளோடும் சுகதேகியாகவும் வாழ பிறந்தநாளில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**ஊழியர் நலன்புரிச் சங்கம்**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,**
**மானிப்பாய்.**

Best Wishes

(8661)


பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து

# சுகாதார நிபுணர்களின் கூட்டமைப்பு கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

மேலதிக கொடுப்பனவு, அடிப்படை சம்பள அதிகரிப்பு, 12 ஆண்டு சேவையுடைய சிரேஷ்ட உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்வு உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து சுகாதார நிபுணர்களின் கூட்டமைப்பு நேற்று புதன்கிழமை கொழும்பில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டது.

சுகாதார தொழிற்துறையினரின் அடிப்படை உரிமைகளை உறுதிப்படுத்துமாறு வலியுறுத்தி கொழும்பு - 10இல் அமைந்துள்ள சுகாதார அமைச்சின் முன்பாக நேற்று முற்பகல் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பத்தேகம - விமலவன்ச தேரர் வீதியில் கூடிய தொழிற்சங்கத்தினர் வீதியோரத்தில் நின்று தமது எதிர்ப்பினை வெளிப்படுத்தினர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் வைத்தியர்கள், தாதிகள் மற்றும் ஏனைய சுகாதார ஊழியர்கள் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

அடிப்படை சம்பளத்தை அதிகரி", "சிரேஷ்ட ஊழியர்களுக்கு பதவி உயர்வு வழங்கு", "தொழிற்சங்கத்தினரின் உரிமைகளை உறுதிசெய்", "மேலதிக கொடுப்பனவை வழங்கு" என்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தி இவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)


**வேலைவாய்ப்பு**

கே.கே.எஸ் வீதி, கோண்டாவிலில் இயங்கும் மை பீட்சா நிறுவனத்திற்கு காசாளர் மற்றும் Delivery Boy தேவை.
வயதெல்லை: 25

தொடர்புகளுக்கு (8665)

077 104 1923



**விரைவு பொதிகள் சேவை**
**V2 TRAVELS**
**UK-975/=Kg**

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- கிளிநொச்சி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

(C-2919)

0768226240 DHL



**கனடாவில்**
**உடனடி வேலைவாய்ப்பு**

**கடல் தொழிலாளர்கள்**

மீன்பிடித்தலில் அனுபவம் உள்ளவர்கள்
கடல் சார் கற்கை நெறிகள் சான்றிதழ்கள்
வைத்திருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

**Cook** மேலை நாட்டு உணவு தயாரிப்பில் அனுபவம் உள்ளவர்கள்

ஏனைய வேலைவாய்ப்புக்கள் (C-3043)

- Industrial Butcher
- Carpenter
- Welder
- Furniture
- Electrical power line & cable workers
- Industrial Electricians
- Electricians
- Plumber
- Food Service Supervisor
- Administrative assistant

தகுதிகள்:- A/L PASS / DIPLOMA/DEGREE
ஆங்கில அறிவு

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்.

0777-068-777



**1வது பிறந்தநாள் வாழ்த்து**

**18.11.2021**



செல்வி
**எமி ஜாஸ்லின் பெர்னாண்டோ**

திரு.திருமதி வின்சன் அஞ்சலின் தம்பதியரின் கனிஷ்ட புதல்வி செல்வி **எமி ஜாஸ்லின் பெர்னாண்டோ** இன்று (18.11.2021) வியாழக்கிழமை தனது முதலாவது பிறந்த தினத்தை தமது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

செல்வி எமி ஜாஸ்லினை அவரது அப்பா, அம்மா, அக்கா, அண்ணன்மார், அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, தொட்டப்பா, தொட்டம்மா, பெரியப்பா, பெரியம்மாமார், சித்தப்பா, சித்தி, மாமாமார் மற்றும் மாமிமார் அனைவரும் குழந்தை இயேசுவின் அருள்பெற்று சீரும் சிறப்புமாக பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

**திரு.வின்சன்**
**இல.24, சின்னக்கடை வீதி, யாழ்ப்பாணம்.**

(8659)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.11.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.